விலை: 40.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 103 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 18 வெள்ளிக்கிழமை (01.04.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

நவக்கிரக யாகம்
நாட்டினதும் மக்களினதும் நன்மை வேண்டி
"ஓம்" அமைப்பினரின் ஒழுங்கமைப்பில்
நவக்கிரக யாகம் (10850)
காலம் : 02.04.2022 (சனிக்கிழமை)
நேரம் : காலை 8.00 மணி
இடம் : யாழ். வீரமாகாளி அம்மன் தேவஸ்தான வளாகம்
அடியார்கள் அனைவரும் இணைந்து பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
www.aaauuummm.org

## தலைவர் பிரபாகரன் படத்துடன் தென்னிலங்கையை சேர்ந்தவர் யாழில் கவனயீர்ப்பு



(யாழ்ப்பாணம்)
தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை பயங்கரவாதியாக்கியது யார்? என்பதனை ஐ. நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவில் 15

## இலங்கைத் தமிழர்களுக்கு உதவிகள் வழங்குங்கள்

### தமிழக முதல்வர் ஸ்டாலின் பிரதமர் மோடியிடம் கோரிக்கை

(புதுடில்லி)
யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் ஊடாக இலங்கைத் தமிழர்களுக்கு உதவிகளை வழங்க இந்திய மத்திய அரசு அனுமதிக்க வேண்டும் என பிரதமர் நரேந்திர மோடியிடம் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கோரிக்கை விடுத்துள்ளார்.
இந்திய பாராளுமன்ற வளாகத்தில் உள்ள பிரதமர் அலுவலக அறையில் பிரதமர் நரேந்திர மோடி- 15

### பொருளாதார நெருக்கடிக்கு எதிர்ப்பு தெரிவித்து

# ஜனாதிபதியின் இல்லத்தை முற்றுகையிட்டு மக்கள் போராட்டம்

## தென்னிலங்கையில் கடும் பதற்றம் இராணுவத்தின் பேருந்து எரிப்பு



- ❖ ஜனாதிபதியின் இல்லத்தை முற்றுகையிட்டு பல்லாயிரக்கணக்கான பொது மக்கள் போராட்டம்.
- ❖ மின்சாரத்தை நிறுத்திவிட்டு போராட்டக்காரர்கள் மீது நீர் மற்றும் கண்ணீர் புகைத் தாக்குதல்.
- ❖ பெருமளவு பொலிஸ், இராணுவம், அதிரடிப்படை குவிப்பு.
- ❖ ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்து.
- ❖ ஜனாதிபதி இல்லம் மீது கல்வீச்சுத் தாக்குதல்.

(15 ஆம் பக்கம் பார்க்க)

எச்சரிக்கை!
இன்று முட்டாள்கள் தினம்

ஏமாந்து விடாதீர்கள்

### நாட்டில் இன்று

# 12 மணி நேர மின்வெட்டு

(கொழும்பு)
நாட்டில் இன்றைய தினம் 12 15

## யாழ். கோவிட் சிகிச்சை நிலையங்களில் மோசடி

### விசாரணைக்கு பிரதமர் மகிந்த பணிப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ். கோவிட் சிகிச்சை நிலையங்களில் இடம்பெற்றுள்ளதாக கூறப்படும் மோசடிகள் தொடர்பில் உடனடி விசாரணைகளை முன்னெடுக்குமாறு பிரதமர் மகிந்த ராஜபக்ச பணித்துள்ளார்.
வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா அவர்களை நேற்று தொடர்புகொண்டு இவ்விடயம் தொடர்பில் உடனடி கவனம் செலுத்துமாறு பிர 15


## தமிழ் மக்களுக்கு தற்போது அரசியல் தீர்வே முக்கியமானது

### நாடு திரும்பும் முன்னர் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர்



(கொழும்பு)
தமிழ் மக்களுக்கு தற்போது அரசியல் தீர்வே முக்கியமானது என இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.
அவர் நாடு திரும்புவதற்கு முன்னர் இலங்கையில் உள்ள இந்திய ஊடகவியலாளர்களை சந்தித்த 15

## தமிழர்களின் சுயாட்சி முறையிலான தீர்வுக்கு பிரித்தானியா உதவவேண்டும்



### பிரிட்டிஷ் தூதரக செயலாளரிடம் சிறீதரன் எம்.பி. கோரிக்கை

(கிளிநொச்சி)
தமிழர்களுக்கான சுயாட்சி முறையிலான தீர்வு கிடைக்க பிரித்தானியா உதவ வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் 15

### தமிழ் தேசிய கூட்டமைப்பிலிருந்து

## ரெலோ வெளியேறினால் சந்தோசமாக இருக்கும்

### சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு

(வவுனியா)
ரெலோ தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இருந்து வெளியேறினால் சந்தோசமாக இருக்கும். எமது கட்சியில் பலருக்கு நீண்டகால எதிர்பார்ப்பே இவர்கள் எப்போது போவார்கள் என்பதே என யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு உல்லாச வாழ்வு எங்களுக்கு பட்டினிச் சாவா?

## யாழில் நாளை மக்கள் போராட்டத்துக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்துக்கு எதிராக நாளை சனிக்கிழமை யாழில் மாபெரும் மக்கள் போராட்டத்துக்கு அழைப்பு விடப்பட்டுள்ளது.

உங்களுக்கு உல்லாச வாழ்வு எங்களுக்குப் பட்டினிச் சாவா? மக்களே வாரீர் கோட்டா - மகிந்த - பசில் ஆட்சியிடம் நியாயம் கேட்போம் என்ற கோஷத்துடன் நாளை சனிக்கிழமை காலை 10 மணியளவில் யாழ்.பிரதான பேருந்து நிலையத்திற்கு முன்பாக மாபெரும் மக்கள் போராட்டம் இடம்பெறவுள்ளது.

புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிசக் கட்சியின் ஏற்பாட்டில் இப்போராட்டம் நடைபெறவுள்ளது. (ம-33)

# தற்போதைய நெருக்கடியில் வீட்டிலிருந்து பணியாற்றுங்கள்

## பிரதமர் மகிந்த பணிப்பு

(கொழும்பு)

தற்போதைய நெருக்கடி நிலையின் தொடராக பிரதமர் அலுவலகம் மற்றும் பிரதமரின் ஏனைய அமைச்சுக்களில் உள்ள ஏனைய அதிகாரிகளை வீட்டிலிருந்தே தமது கடமைகளை செய்யுமாறு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

எரிபொருளை சேமிப்பதற்காக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக மகிந்த தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்த அறிக்கையில்,

"எங்கள் நாடு முன்னொருபோதுமில்லாத சவாலை எதிர்கொண்டுள்ள நேரத்தில், எரிபொருளை சேமிப்பதன் ஒரு படியாக வீட்டில் இருந்தபடியே தங்கள் பணிகளை மேற்கொள்ளுமாறு பிரதமர் அலுவலகம் மற்றும் எனது அமைச்சக அதிகாரிகளுக்கு நான் அறிவுறுத்தியுள்ளேன்."

மின்வெட்டுக்கு மத்தியிலும், இந்த அதிகாரிகள் தங்களால் இயன்ற வரையில் தங்கள் பணிகளைச் செய்து வருவதை நான் நன்றியுடன் ஒப்புக்கொள்கிறேன்.

"ஒரு அரசாங்கமாக, இந்த நெருக்கடியின் விளைவாக மக்களின் நிலை குறித்து நாங்கள் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம். இந்த சவால்களை கடக்க சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருவதாக தெரிவித்துக் கொள்கிறேன் என்றுள்ளது. (ம)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடியில் 10 பரப்புக் காணி விற்பனைக்கு

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- ஏ-09 றோட்டின் முகப்பில் இருந்து இரண்டாவது காணி (50 மீற்றர் தூரம்)
- பிள்ளையார் வீதியில் (பெற்றோல் நிரப்பு நிலையம் அருகாமை வீதி )
- 20 அடிப் பாதையுடன்

(10860)

077 623 4204

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மறவன்புலத்தில் 90 பரப்புக் காணி விற்பனைக்கு (நிலப்பரப்பு)

- மறவன்புலம் மாவடி சந்திக்கு அருகாமை.
- இரண்டு பரப்பாகவும் 1½ பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாணம் - பூநகரி பிரதான வீதியில் (A32) இலிருந்து 200m தூரத்தில்.
- நாவற்குழி சந்தியில் இருந்து 2½ Km தூரம் (A9)
- சகலகலாவல்லி வித்தியாலயம் அருகாமை
- நல்ல தண்ணீர் கிராமம் (மணல் மண்)
- அதிக குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி (நல்ல சூழல்)
- 16 அடி பாதையுடன்

ஒரு பரப்பின் விலை -
3 இலட்சத்து 50 ஆயிரம் மட்டும் (350,000)

(10860)

074 291 3725, 074 291 3726, 074 291 3727

புதிய பிரிவுகள் ஆரம்பம்
02.04.2022
வங்கியியல் கற்கைநெறிகள்
BANKING COURSES
IABF & DABF
கணக்காளர் கற்கை நெறிகள்
CHARTERED ACCOUNTING COURSES
Business Level - i, ii
தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு
aat ( Sri Lanka)
(AA1, AA2, AA3)
G.C.E. A/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்.
CERTIFICATE COURSE IN ENGLISH
Further Details
Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.
(C-4099)
021 222 3382, 021 222 9149, 077 440 5917

## காணிகள், வீடுகள் உடன் விற்பனைக்கு

நல்லூர் சுற்றாடலில் 5¼ பரப்பு, 4 பரப்பு, 3 பரப்பு, 3 பரப்பு, 2 பரப்பு காணிகள் விற்பனைக் குண்டு.

ஆடியபாதம் வீதியில் கலர் லைற்றில் இருந்து 100 மீற்றர், பல்கலைக்கழக பக்கமாக அண்மையில் 2 பரப்பு 6 குளி சுற்றுமதில், கேற்றுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:-
ராஜா சொத்து விற்பனை
ந.தர்மராஜா (எம்.ஜி.ஆர்)
077 603 3259, 077 220 8432
(10856)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் 74 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)

- சுண்டிக்குளப் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில்.
- A32 பிரதான வீதியில் இருந்து இரண்டாவது காணி.
- A32 பிரதான வீதியில் இருந்து இரு வழிப்பாதைகள் உள்ளன.
- 14 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் 4 பரப்பாகவும் 5 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் கட்டுக்கிணற்றுடன் பயன்தரும் 276 தென்னைகள் உள்ளன.

தரகர் தேவையில்லை

பார்வையிடும் நேரம் -
காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை

ஒரு பரப்பின் விலை ரூ.450,000

(10857)

ஜெயம் - 077 814 7389, 077 241 7589


# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
1948 - 05 - 22



மறைவு
2022 - 03 - 04

கடந்த 04.03.2022 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் கோவிந்து இரத்தினசிங்கம்

(ஓய்வுபெற்ற பொறியியலாளர் - ஓமான்)

அவர்களின் இறுதிக் கிரியைகளின்போது எமக்கு நேரிலும் தொலைபேசி மூலமாகவும் சமூக வலைத்தளங்கள் மூலமாகவும் அனுதாபச் செய்திகளைத் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் எம்முடன் இணைந்து சகல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் எமது நன்றி அறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**குறிப்பு:** 03.04.2022 ஞாயிற்றுக்கிழமை நாளை மறுதினம் முற்பகல் 10.30 மணிமுதல் எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளவும்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

நீதிமன்ற வீதி,
மல்லாகம்.

(10838) குடும்பத்தினர்

# வலிகாமம் தெற்கு பிரதேச சபை

## பகிரங்க அறிவித்தல்

## சந்தைக் கழிவு முறைமையை முற்றாக நீக்கல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட மருதனார்மடம், சுன்னாகம் பொதுச்சந்தைகளில் விவசாய உற்பத்திப் பொருட்களுக்கான 10% கழிவு முறைமையினை முற்றாக நீக்கும் பொருட்டு எதிர்வரும் 03.04.2022 ஆம் திகதி முதல் உற்பத்தியாளர்களால் விற்பனைக்காக சந்தைக்கு கொண்டு வரப்படும் விவசாய உற்பத்திப் பொருட்கள் கூறல் அடிப்படையில் விலை தீர்மானிக்கப்பட்டு அதற்கான பெறுமதி கொள்வனவு செய்யும் வியாபாரிகளால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதுடன், குத்தகைதாரருக்குரிய 4% கட்டணம் உற்பத்தியாளர்களால் குத்தகைதாரருக்கு வழங்கப்பட வேண்டும். அத்துடன் உரிய நிறைக்கு கூறப்படும் விலை விகிதங்களுடன் குத்தகைதாரரால் பற்றுச்சீட்டு வழங்குவது உறுதி செய்யப்படும். இந்த நடைமுறைக்கு அமைவாக உற்பத்தியாளர்கள், வியாபாரிகள் மற்றும் தொடர்புடைய பொதுமக்கள் ஆகியோர் பிரதேச சபைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. தர்சன்**
தவிசாளர்
வலி.தெற்கு பிரதேச சபை
சுன்னாகம்

(C-4100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

virtusa

Invicta innovations

SGIC
Samuel Gnanam IT Centre

# Calling all Tech-Whizzes from the North!

## Virtusa is coming to you!

Be prepared for an insightful series of Tech-talks followed by Open Day interviews and On-spot recruitment opportunities.

Venue : Samuel Gnanam IT Centre and Invicta Innovations, Jaffna

Date : April 02-April 03, 2022

Be there this April for an opportunity of a lifetime.

Visit, "HR Department of **Samuel Gnanam IT Centre** in person along with hard copy of your CV and enroll yourself for Tech-talk and recruitment interview".

Address:
72,Palay Road, Thirunelvely,
Jaffna.

Contact:
SGIC HR
Tel-021 221 4209

(10844)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹசரங்க அபார பந்து வீச்சு

## முதல் வெற்றியை பதிவு செய்தது பெங்களூர்

ஐ.பி.எல். இருபது-20 தொடரின் ஆறாவது லீக் போட்டியில், றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி 3 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றுள்ளது.

மும்பையில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியும் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி, முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி, 18.5 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 128 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.



இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ரஸ்ஸல் 25, உமேஷ் யாதவ் 18 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பெங்களூர் அணியின் பந்துவீச்சில், வனிந்து ஹசரங்க 4, ஆகாஷ் தீப் 3, ஹர்சல் பட்டேல் 2, சிராஜ் ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 129 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி, 19.2 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது.



இதனால், றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி 3 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

கொல்கத்தா அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக செர்பேன் ருத்தர்போர்ட் 28 , ஷபாஸ் அஹமட் 27 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

கொல்கத்தா அணியின் பந்துவீச்சில், டிம் சவுத்தீ 3, உமேஷ் யாதவ் 2, சுனில் நரைன் மற்றும் வருண் சக்ரவர்த்தி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக பெங்களூர் அணியின் நட்சத்திர சுழற்பந்து வீச்சு சகலதுறை வீரரான வனிந்து ஹசரங்க தெரிவு செய்யப்பட்டார். (6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2548

### லிஷாய்னன்

மாமியார்: "6 மணி ஆகிடுச்சு, சாமி பாட்டு போட்டு விடு.."
நான்: "சரிங்க அத்தை.."




"வாய்யா சாமி, மந்திர சாமி மன்மத சாமி போக்கிரி சாமீ..."

### சஜிவன்


எப்படி தான் ஓடிப் போயி கல்யாணம்லாம் பண்ணுறாங்களோ தெரியல



எனக்கெல்லாம் எந்திருச்சி போய் Fan போடவே சோம்பேறித் தனமா இருக்கு

### ரேவிதா

நானா இது... இவ்ளோ அழகா இருக்கேன்...



என் கண்ணே பட்டுடும் போல இருக்கே...

### தனுசன்

கையெழுத்து தான் கேவலமா இருக்கனா....



தலையெழுத்து அதுக்கு மேல கேவலமா இருக்குடா உனக்கு...

### தீபிகா

விசேஷ வீட்டுக்கு சென்றால் பையன் சாப்டானான்னு வருத்தப்பட்டா, அது "அம்மா"



கையோட நாலு இட்லிய பார்சல் கட்டிட்டு வந்தா அது "பாட்டி"...!!

### அயந்தன்

புயல் நிவாரண நிதி, மழை நிவாரண நிதி ன்னு சொல்றானுங்க



அதே மாதிரி வெயிலுக்கும் நிவாரண நிதி ஒதுக்கீடு செஞ்சா ரொம்ப நல்லா இருக்கும்.. வெயிலு தாங்க முடியல...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயற்பட்டு மகிழ்வோம்

(கரணவாய்)

நெல்லியடி சனசமூக நிலைய சன்மார்க்க சபை பாலர் பாடசாலையின் மழலைகளின் செயற்பட்டு மகிழ்வோம் விழாவானது நாளை 2 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு முருகமூர்த்தி ஆலய முன்றலில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆரம்பப் பிள்ளை அபிவிருத்தி பிரிவு) க. சத்தியசீலன் கலந்து கொள்வார். (5-6-60)

# கஞ்சாவுடன் மூவர் கைது

(அராலி)

கோவளம் கடற்பரப்பில் 66.66 கிலோகிராம் கஞ்சாவுடன் மூன்று சந்தேக நபர்கள் கடற்படையினரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவைச் சேர்ந்த இருவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவரும் இவ்வாறு கஞ்சாவினை கடத்த முற்பட்டவேளை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கடற்படையினரின் மேலதிக விசாரணைகளின் பின்னர் இளவாலை பொலிஸாரிடம்ஒப்படைக்கப்படுவர்.(5-6-104)


**மீண்டும் ராஜா திரையரங்கில் ARC மொபைலின் அனுசரணையுடன் சர்வதேச விருதுகள் பெற்ற விமல்ராஜின்**

**எழில், சுகந்தி குறுந்திரைப்படங்கள் வெளியீடு - அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**




**எதிர்வரும் ஏப்ரல் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு சாவகச்சேரி பாலா திரையரங்கிலும் திரையிடப்படவுள்ளது.**


# இராசிபலன்

01.04.2022
பங்குனி 18 , வெள்ளிக்கிழமை
அமாவாசை பிற்பகல் 12.41 மணிவரை

உத்தரட்டாதி முற்பகல் 11.19 மணிவரை
சுபநேரம்- 6.11-7.41 மணிவரை
இராகுகாலம் -10.41-12.11 மணிவரை

சித்தாமிர்தம்,
முட்டாள்கள் தினம்
சந்திராஷ்டமம் மகம்,பூரம்

**வளவன்**

**மேஷம்:** தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம் பெறலாம், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**ரிஷபம்:** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பொது வாழ்வில் மதிப்பும், மரியாதையும் உயரும் நாள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், போசன சுகமுண்டு.

**மிதுனம்:** வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகம் உண்டு.

**கடகம்:** புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் உண்டு, உடல் நலன் சீராகும்.

**சிம்மம்:** காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள், வாகனங்களில் செல்லும் போது விழிப்புணர்வு அவசியம்.

**கன்னி:** உறவினர்களின் சந்திப்பு இடம்பெறும் வாய்ப்புண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், எடுத்த காரியம் எளிதில் கைகூடும்.

**துலாம்:** வழிபாட்டில் ஆர்வம் கூடும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம் பெறும் வாய்ப்புண்டு, செய்தொழில் மேன்மையுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**விருச்சிகம்:** செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**தனுசு:** சென்ற இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், நண்பர்கள் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**மகரம்:** உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், உதிரிவருமானங்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கும்பம்:** வாக்கு மேன்மையுண்டு, எடுத்த காரியங்களில் உற்சாகம் காட்டுவீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மீனம்:** ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணிந்தார்க்கு சமுத்திரம் முழங்கால் மட்டும்.

# தந்தை செல்வாவின் நினைவு நிகழ்வு




(யாழ்ப்பாணம்)
இலங்கை தமிழரசுக்கட்சி யின் ஸ்தாபகத் தலைவர் எஸ்.ஜெ.வி.செல்வநாயக த்தின் (தந்தை செல்வா) 124 வது ஜனன தினம் நேற்று யாழ்ப்பாணத்தில் அமைந்து ள்ள தந்தை செல்வா நினை விடத்தில், நினைவுத் தூபி க்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

தந்தை செல்வா அறக்கட் டளை நிலையத்தின் தலை வரும் தென்னிந்தியத் திருச் சபையின் முன்னாள் பேரா யருமான சுப்பிரமணியம் ஜெபநேசன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் இலங்கை தமிழரசுக் கட்சி யின் தலைவர்மாவை சேனாதி ராஜா, வலிகாமம் வடக்கு பிரதேச சபை தவிசாளர் எஸ். சுகிர்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். மன்னார், வவு னியா ஆகிய இடங்களிலும் நினைவு நிகழ்வுகள் இடம்பெற் றன. (5-33-104-285-299)



சாவகச்சேரி நகர சபையின் உதயசூரியன் முன்பள்ளி விளையாட்டு முற்றத்திற்கு உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வும் முன்பள்ளியின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வும் கடந்த 24 ஆம் திகதி நடைபெற்றன. புலம்பெயர் உறவான இரட்ணம் ரவீந்திரன் என்பவர் முன்பள்ளியின் விளையாட்டு முற்றத்திற்கு ஒன்றரை இலட்சம் ரூபாய் பெறுமதியான விளையாட்டு உபகரணங்களை வழங்கினார். விளையாட்டு முற்றத்தை சாவகச்சேரி நகரசபை தவிசாளர் சிவமங்கை இராமநாதன் திறந்து வைத்திருந்தார். (படம்:-சுபேசன்)

# பொருட்களின் விற்பனை விலையை தீர்மானிக்க முடியாத நிலையில் அரசு

## பிரதேச சபைத் தவிசாளர்

(சாவகச்சேரி)
இந்த நாட்டில் அரசு மற் றும் அரச திணைக்களங்கள் இயங் குகின்றனவா? என்ற சந்தேகம் நிலவுவதாக சாவ கச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் பிரதேச சபையில் இடம்பெற்ற மாதா ந்த அமர் வின் போதே அவர் இதனைத் தெரிவித்திருந் தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கை யில்,

நாட்டில் பொருட்களின் விலை பன்மடங்கு அதிக ரிக்கப்பட்டு வியாபாரிக ளால் விற்பனை செய்யப்படுகி றது.

விலை மதிப்பு திணை க்களங்கள் இருந்தும் விலை க்கட்டுப்பாடின்றி வியாபாரிகள் நினைத்த விலைக்கு பொருட் களை விற்பனை செய்கின்ற னர்.

அரச திணைக்களங்கள் பொருட்களுக்கான விலை களை கட்டுப்பாட்டில் வைத்தி ருக்க வேண்டும்.

எரிபொரு ட்கள், எரிவாயு என்பன இரவிரவாக விலை யேற்றம் காண் கின்றன. விலையை தீர்மானிக்க முடி யாத நிறுவனமாக அரசு மாறி யுள்ளது.

விலைகளைக் கட்டுப்படு த்தி வைத்திருக்க வேண்டிய பொறு ப்பு அரசிற்கு உள்ளது. ஆனால் தற்போது விலை களை யார் யாரோ தீர் மானிக்கின்றனர்.

இதனால் நாட்டில் சாதா ரண மக்கள் வாழ முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

இந்த கடினமான நிலை யில் பஞ்சம், பசி போன்றன ஏற்பட்டு சமூகவிரோதச் செயற்பாடுகள் கட்டுக்கடங் காமல் போகும் அபாயம் காணப்படுகிறது.

உள்ளூர் உற்பத்தியாக இருந்தாலும் சரி, இறக்குமதிப் பொருளாக இருந்தாலும் சரி வியாபாரி நினைப்பது தான் விலை என்ற அடிப்படையில் யாராலும் கட்டுப்படுத்த முடி யாத அளவிற்கு நிலைமை சென்று கொண்டிருக்கிறது.

எமது மக்களுக்கு இது ஒன்றும் புதிய விடயம் அல்ல. 30 வருட கால பொருளாதார தடை இருந்த காலத்தில் கூட பட்டினியால் செத்தவர்கள் இங்கு யாருமில்லை. அப் போது திட்டமிட்ட பொருளா தாரக் கட்டமைப்பு ஒன்று காணப்பட்டது.

விலைக் கட்டுப்பாடு இருந் தது. ஆனால் இப்போது யாழில் மட்டுமல்ல இலங்கை யின் எந் தப் பிரதேசத்தி லும் விலைக் கட்டுப்பாடு இல்லை.

இந்த நிலைமை தொடர் ந்தால் நாட்டில் கொலை, கொள்ளை போன்ற விரும்ப த்தகாத சம்பவங்கள் இடம் பெறும் என அவர் மேலும் தெரிவித்தார். (5-6-30)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)
இலங்கை திறந்த பல்க லைக்கழகத்தினால் மனிதவள முகாமைத்துவம்மற்றும்கணினி அடிப்படைக்கல்வி ஆகிய குறு கிய கால கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்ப ட்டுள்ளன.

பதினெட்டு வயதிற்கு மேற் பட்ட மற்றும் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் 6 பாடங்களில் சித்தியடைந்த யாவரும் இக் கற்கை நெறிகளுக்கு விண்ணப் பிக்க முடியும்.

இக் கற்கை நெறிக்கான விண்ணப்ப படிவங்களை எதிர் வரும் 5 ஆம் திகதி வரை யாழ்.பிராந்திய நிலையத்தில் பெற்று விண்ணப்பிக்க முடியு மென யாழ்.பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் தெரிவித் துள்ளார். (5)

# இந்திய மீனவர் மூவர் கைது படகும் பறிமுதல்

(அராலி)
காரைநகர் கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மூன்று இந்திய மீனவர்கள் கடற்படையினரால் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டுள்ள னர்.

இதன்போது மீன்பிடி நடவ டிக்கைக்கு உபயோகித்த படகு ஒன்றும் கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட மீன வர்கள் விசாரணைகளுக் காக மயிலிட்டி கடற்படை முகா மிற்கு அழைத்து வரப்பட்டன ர். (5-6-104)

# மின்பிறப்பாக்கிகள் பழுது நோயாளர்கள் அவதி

(சாவகச்சேரி)
சாவகச்சேரி ஆதார மருத் துவமனையில் இரண்டு ஜென ரேட்டர்கள் (மின்னாக்கிகள்) இருந்தும் மின்தடை ஏற்படுகி ன்ற போது தொடர்ச்சியாக மருத் துவமனை இருளில் மூழ்குவ தாக பொதுமக்கள் சுட்டிக்காட்டி யுள்ளனர்.

இயங்கு நிலையில் காணப் பட்ட மின்னாக்கி பழுதடைந் திருப்பதாகவும், மற்றொரு மின் னாக்கி எந்தவிதமான பராமரி ப்புமின்றி கடந்த 2018 ஆம் ஆண்டு தொடக்கம் மருத்துவ மனைக்கு முன்பாக வெயில் மற்றும் மழையில் காணப்படுவ தாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதனால் நோயாளர்கள் மின் தடை ஏற்படும் நேரத்தில் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

நாட்டில் தொடர்ச்சியாக மின் தடை அமுல்படுத்தப்பட்டு வரும் நிலையில் மருத்துவமனை நிர்வாகம் மின்னாக்கிகளை சரி செய்ய வேண்டும் எனவும் தெரி வித்தனர். (5-6-30-104)

# கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் ஆதிமயி லிட்டி, அருள்மிகு பெரும்பரப்புப் பிள்ளையார் ஆலய பஞ்ச குண் டபக்ஷ அஷ்டபந்தன புனராவர் த்தன மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 6 ஆம் திகதி புதன் கிழமை காலை 9.12 மணி முதல் 10.27 மணிவரையு ள்ள சுபநேரத்தில் நடை பெறும்.

இக் கும்பாபிஷேகத்தினை முன்னிட்டு எண்ணெய் காப்பு சாத்தும் நிகழ்வு எதிர்வரும் 4 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணி முதல் மறு நாள் செவ்வாய்க்கிழமை நண் பகல் 12 மணிவரை நடை பெறும். (5)

# ஓம் அமைப்பின் ஒழுங்கமைப்பில் நவக்கிரக யாகம்

(யாழ்ப்பாணம்)
ஓம் அமைப்பின் ஒழுங்க மைப்பில் நவக்கிரக யாகம் வண்ணை ஸ்ரீ வீரமா காளி அம்மன் தேவஸ்தான வளாகத்தில் உள்ள சிங்கார வேலவன் சிவகாயத்திரி அம்பாள் சந்நிதானத்தில் எதிர்வரும் 2 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறவுள் ளது. (5)

# பட்டப்பகலில் திருட்டு

(அராலி)
அராலி செட்டியார் மடத்தில் உள்ள வீடு ஒன்றில் இருந்த ஐ போன் ஒன்றும் ஐயாயிரம் ரூபாய் பணமும் கடந்த செவ் வாய்க்கிழமை பகல் திருட்டு போயுள்ளன.

குறித்த வீட்டில் உள்ளவர் கள் வெளியே சென்ற வேளை குறித்த திருட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் வட் டுக்கோட்டை பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடு பதிவு செய் யப்பட்டதையடுத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்ற னர். (5-6-104)

# தொழில்நுட்பவியல் கல்லூரி கற்கை நெறிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)
யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரியின் 2022 கல்வியா ண்டுக்கான கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்பட உள்ளன.

அந்த வகையில் இலத்திர னியல், கைத்தொழில்துறை மின்னியலாளர், மோட்டார் வாகனத் தொழில்நுட்பவிய லாளர், நீர்க்குழாய் பொருத்து னர், அலுமினியப் பொருள் உரு வமைத்தல், வீட்டுப் பாவனை மின் உபகரணங்கள் திருத்து நர், மரக் கைப்பணி தொழில் நுட்பவியலாளர் (கட்டடம்), மோட்டார் வாகன உருச்செப்ப னிடல், மோட்டார் வாகன வர் ணம் பூசுநர், பொறியீட்டுச் சானறிதழ், வில்லுருக்கி ஒட்டு நர், ஆபரண உற்பத்தி கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழினத்திற்கான அடையாளங்களை உலகிற்குக் காட்டியவர் தந்தை செல்வா

## யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் சிறிசற்குணராஜா புகழாரம்



(யாழ்ப்பாணம்)

**தமிழ் அரசியல்வாதிகள் அடுத்த மாகாணசபைத் தேர்தலுக்கு எவ்வாறு செயற்படுவது என்பது தொடர்பில் செயற்படுகிறார்களே தவிர தமிழ் மக்களை காப்பாற்றுவதற்காகச் செயற்படவில்லை என யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ்.சிறிசற்குணராஜா தெரிவித்துள்ளார்.**

தந்தை செல்வாவின் 124 ஆவது ஜனன தின நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட விதவைகள் காணப்படுகின்றார்கள். ஆனால் எமது அரசியல் வாதிகளிடம் அவர்களுக்கு உதவுவதற்கு எந்த ஒரு திட்டமும் இல்லை.

குறிப்பாக வடக்கு-கிழக்கை மனதளவில் ஒற்றுமையாக்க வேண்டும்.

நாங்கள் தோற்கடிக்கப்பட்டவர்களாக இருக்கலாம். ஆனால் தொடர்ந்தும் அவ்வாறே இருக்கத் தேவையில்லை.

எமக்கென்று ஒரு பாரம்பரியம் உள்ளது. அவற்றினை காப்பாற்றுவதற்கு முதலில் நமது அரசியல் வாதிகள் செயற்படவேண்டும்.

உலக நாடுகளில், அந்த நாடுகளின் தயாரிப்புகளில், அந்த நாடுகளின் பெயர்கள் குறிப்பிடப்படும். ஆனால் யாழ்ப்பாண தயாரிப்பு என்று ஏதாவது உள்ளதா?

உதாரணமாக தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் ஆறு.திருமுருகன் எவ்வளவு சமூகப் பணி செய்கின்றார்.

அவர் எந்த ஒரு அரசியல் தலையீடும் இன்றி தன்னிச்சையாக பல சமூக செயற்பாடுகளை முன்னெடுக்கும் நிலையில் இதுவரை எந்த ஒரு செயற்பாடுகளும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களால் செயற்படுத்தப்படவில்லை.

எமக்கு ஒரு கலை கலாசாரம் உள்ளது. எமக்கு ஒரு மொழி உள்ளது என்பதை உலக நாடுகளுக்கு காண்பித்தது தந்தை செல்வாவின் செயற்பாடுகளே.

இந்திய நாட்டைப் பார்த்தால் எத்தனையோ மொழிகள், எத்தனையோ இன மக்கள் உள்ளார்கள். ஆனால் அவர்கள் இன்று உலக நாடுகளில் தலை சிறந்து விளங்குகின்றார்கள். அதற்குக் காரணம் சிறந்த அரசியல் யாப்பினை உருவாக்கியதே.

ஆனால் நமது அரசியல் வாதிகள் அரசியல் யாப்பை உருவாக்குவது தொடர்பில் சிந்திக்கவில்லை.

இன்றும் 13,13+ சமஷ்டி என்று தமக்குள்ளே கருத்து முரண்பாடே தவிர செயற்படுத்த முடியவில்லை என அவர் தெரிவித்தார். (ஙி)

# நாடு இருளில்; ஜனாதிபதி மாளிகைக்கு மின் விநியோகம்

(கொழும்பு)

ஜனாதிபதி மாளிகை மற்றும் பாராளுமன்றிற்கு தொடர்ச்சியாக மின்சாரம் விநியோகிக்கப்பட உள்ளது.

சுதந்திர வர்த்தக வலயங்கள், மின்சார நிலையங்களை அண்டிய பகுதிகள், கைத் தொழில் பேட்டை கள் உள்ளிட்ட நாட்டின் 191 இடங்களில் மின்சாரம் துண்டிக்கப்படாது என இலங்கை பொதுப்பயன் பாட்டு ஆணைக்குழுவினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஙி)

# வீதிக்கு இறங்கி போராட சமூக வலைத்தளங்கள் ஊடாக அழைப்பு

(கொழும்பு)

எரிபொருள் நெருக்கடி, மின் தடை, பொருட்களின் விலையேற்றம் உள்ளிட்ட நெருக்கடிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை நாடு முழுவது மக்களை வீதிக்கு இறங்கி போராட சமூக வலை தளங்கள் ஊடாக சில குழுக்கள் பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றன.

அனைத்து பிரேசங்களிலும் நாளை மறுதினம் பிற்பகல் 3 மணிக்கு வீதியில் வந்து போராட்டம் நடத்த வேண்டும் என்று அந்த குழுக்கள் டெலிகிராம் சமூக வலைத்தள பக்கம் ஊடாக அழைப்பு விடுத்துள்ளன.

அமைப்பு, கட்சி பேதமின்றி போராட்டதை நடத்தவுள்ளதாக அந்த குழுக்கள் தெரிவித்துள்ளன.

இந்தக் குழு அழைப்பு விடுத்துள்ள இணைப்பு பக்கத்தில் இணைந்து பெருமளவானவர்கள் ஆதரவு தெரிவித்து வருகின்றனர். (ஙி)

# பரீட்சைகள் பிற்போடப்படமாட்டாது

(கொழும்பு)

பரீட்சை வினாத்தாள்களை அச்சிடுவதற்கான கடதாசிகளுக்கு தட்டுப்பாடு இல்லை என அமைச்சர் தினேஷ் குணவ ர்தன தெரிவித்துள்ளார்.

எனவே, திட்டமிட்ட அடிப் படையில் பரீட்சைகள் நடத்தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, பரீட்சைகள் பிற்போடப்படும் என வெளியாகும் தகவல்கள் ஏற்புடையவை அல்ல எனவும் திட்டமிட்ட அடிப்படையில் பரீட்சைகள் நடத்தப்படும் எனவும் அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார். (ஙி)


# ஆதனப்பெயர் மாற்றம்

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம்-15 அரசடி வீதி வரிமதிப்பீட்டு இலக்கம் 369,371 என்னும் ஆதன இலக்கத்தைக் கொண்ட ஆதனம் இளையவி பழனித்துரை என்னும் பெயரில் ஆதனப் பதிவேட்டில் காணப்படுகின்றது. இதன் பின்னகத்தான ஆதன அட்டவணையில் நன்கு விபரிக்கப்படும் ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு சிற்றம்பலம் விஸ்வலிங்கம் முகதாவில் 23.03.1959 ஆம் திகதி 4566ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் இளையவி பழனித்துரையும் பெண் அன்னலட்சுமியும் என்பவர்கள் மயிலு சண்முகம் மகள் இரத்தினம் என்பவருக்கு நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு அருளம்பலம் இராஜரட்ணம் முகதாவில் 29.06.2011 ஆம் திகதி 7744ம் இலக்க உறுதிப்படுத்தல் உறுதி மூலம் மாதாவழி முதுசம் என பழனித்துரை புஷ்பநவகுமார் என்பவர் உறுதிப்படுத்தல் சாசனமாக நிறைவேற்றிக் கொண்டுள்ளார்.

பின்னர் குறித்த ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு அருளம்பலம் இராஜரட்ணம் முகதாவில் 01.10.2016 ஆம் திகதி 10155ம் இலக்க உறுதிப்படுத்தல் உறுதி மூலம் பழனித்துரை புஷ்பநவகுமார் மகள் றொஷானி என்பவர் பிதாவழி முதுசமாக வந்தடைந்ததாக குறிப்பிட்டு உறுதிப்படுத்தல் சாதனமாக நிறைவேற்றிக் கொண்டுள்ளார்.

ஆதனடாப்பு :- வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவில்பற்று வண்ணார்பண்ணை வடகிழக்கு இறை நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குட்பட்ட J/103 ம் இலக்க கிராம அலுவலர் பிரிவில் அமைந்த "நீர்நொச்சியடி" நில பர 1 குளி 16.90ம். இது 2003.08.03 ஆம் திகதி நில அளவையாளர் ரி.தங்கராஜா தயாரித்த 4020ம் இலக்க நில அளவைப் படத்தில் துண்டு 2 துண்டு 4 எனச் சுட்டப்பட்ட பகுதிகளாகும். இந்த நிலப்பரப்பு ஒன்று குளி பதினாறு தசம் ஒன்பது சைபரும் அதற்குள் அடங்கிய கடைக் கட்டடம் கிணறுப் பகுதியில் இதடாங்கலும் இதன் எல்லை.

கிழக்கு :- சிவன் வீதியின் பகுதியும் குறித்த 4020ம் இலக்க நில அளவைப் படத்தில் துண்டு 3 என சுட்டிய ஆதனம்.

வடக்கு :- குறித்த படத்தில் துண்டு 1 எனச் சுட்டிய ஆதனம்.

மேற்கு :- மாணிக்கம் பசுபதியின் ஆதனமும் பத்மநாதன் சிவமலரது ஆதனம்.

தெற்கு:-குறித்த 4020ம் இலக்க நில அளவைப் படத்தில் துண்டு 3 எனச் சுட்டிய ஆதனமும் வெள்ள வாய்க்காலும் இதடாங்கலும் இதற்கு சேர்ந்தவைகளும்.

தற்போது பழனித்துரை புஷ்பநவகுமார் மகள் றொஷானி இவ் ஆதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ் ஆதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத் தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது பழனித்துரை புஷ்பநவகுமார் மகள் றொஷானி என்னும் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்புக்கும் யாழ்ப்பாணம் மாநகர சபை பொறுப்பாளி அல்ல என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**விஸ்வலிங்கம் மணிவண்ணன்**
**கௌரவ முதல்வர்**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

(C-4098)


# மருந்துகளின் விலைகளை மீள அதிகரிக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

ஔடதங்களின் விலைகளை மீண்டும் அதிகரிக்குமாறு ஔடத இறக்குமதியாளர்கள் சங்கத்தினர் சுகாதார அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

டொலருடன் ஒப்பிடுகையில் ரூபாவின் பெறுமதி வீழ்ச்சிய டைந்துள்ள காரணத்தினால் இந்தக் கோரிக்கை முன்வைக் கப்பட்டுள்ளதாக ஔடத உற்ப த்தி விநியோகம் மற்றும் ஒழு ங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சின் செயலாளர், மருத்துவர் சமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதனிடையே, சில மருந் துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக அரச மருத்துவமனைகளின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஙி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 09

# மனிதநேயம் தொற்றாக பரவினால்...



கொரோனா அதி தீவிரமான காலப்பகுதி அது. ராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் ஒரு கொவிட் நோயாளி மரணம் அடைந்ததையடுத்து அன்று மதியம் அவருடைய மனைவியும் அதே மருத்துவமனையில் இறக்கிறார். அடுத்தடுத்து இருவரினது மரணத்தையும் பார்த்த அதிர்ச்சி தாங்காமல் அவர்களுடைய 24 வயது மகள் மயங்கி விழுகிறாள்.

அதனையடுத்து வேறொரு மருத்துவமனையில் அவர் சேர்க்கப்பட்டார்.

மயக்கம் தெளிந்த மகள் படுக்கை விட்டு எழ முடியாத நிலைமை. துக்கத்தை மீறி குழப்பத்தில் தவிக்கிறார்.

அம்மா, அப்பா உடல்களை மீட்டு இறுதிச் சடங்குகள் முடித்து தகனம் செய்யும் கடமையை எப்படிப் பூர்த்தி செய்வது?

அண்ணனோ தம்பியோ கிடையாது. ஒரே மகள். உதவிக்கு அழைக்க எவரும் இல்லை.

இரவெல்லாம் கண்ணீர் வடிக்கிறார். கடவுளிடம் மன்றாடுகிறார்.

மறுநாள் காலையில் அங்கு வந்த ஓர் இளைஞன் இதைப் பார்க்கிறார். என்ன பிரச்சினை எனக் கேட்கிறார். கண் கலங்குகிறார்.

கொவிட் நோயாளியின் உடலை மருத்துவமனையின் பிணவறையை விட்டு வெளியே கொண்டு வருவது சாதாரண விடயம் அல்ல என்பது அவருக்குத் தெரியும்.

தம்பதியர் இருவர் உடல்கள் இருக்கும் மருத்துவமனையில் இருந்து ஆவடி வெகு தொலைவில்.

ஆவடி நகராட்சி சுகாதார ஆய்வாளர், இவர்கள் இந்தப் பகுதியில், இந்த முகவரியில் தான் வசிக்கிறார்கள் என்று சான்றளிக்க வேண்டும்.

இன்னாரிடம் உடலை ஒப்படைக்கலாம் என்று அனுமதி எழுதித்தர வேண்டும்.

இரண்டும் காட்டினால்தான் ராயப்பேட்டை மருத்துவமனையிலிருந்து உடல்களை வெளியே எடுக்க முடியும்.

இளைஞன் ஆவடிக்கு தொலைபேசியில் தொடர்பு கொள்ளும் போது வேறு வேலை இருப்பதால் ராயப்பேட்டைக்கு வர இயலாது என்கிறார் ஆவடி சுகாதார ஆய்வாளர்.

சூழ்நிலையை விளக்கிய இளைஞன், "உங்க லெட்டர் பேட்ல எழுதி கையெழுத்துப் போட்டு, அதை மொபைல்ல போட்டோ எடுத்து வாட்சப்ல அனுப்புங்க" என்று கேட்கின்றார்.

அதிகாரிக்கு நல்ல மனசு. அவ்வாறே செய்கிறார்.

அதை ராயப்பேட்டை மருத்துவமனை அதிகாரிகளிடம் காட்டி உடல்களை எடுத்துச் செல்ல அனுமதி பெறுகிறார். தகன முன்பதிவுக்காக பெசன்ட் நகர் மின் மயானத்துக்குச் செல்கிறார்.

கொவிட் மரணம் என்றால் சடலத்தை எப்படி கையாள வேண்டும் என்று அரசு விதி இருக்கிறது. மாநகராட்சியிடம் அத்தாட்சி பெற்று வாருங்கள் என்கிறார் மயான நிர்வாகி.

மாநகராட்சியைத் தொடர்பு கொள்ளும் இளைஞன். இறந்தவர்களின் ஆதார் அட்டை காட்டிதான் சான்றிதழ் பெறலாம் என்கிறார் மாநகராட்சி அதிகாரி.

படுக்கையில் இருக்கும் மகளிடம் விசாரிக்கிறார் இளைஞன். அந்தப் பெண்ணுக்கு அப்பா அதெல்லாம் எங்கே வைத்திருக்கிறார் என்று தெரியவில்லை.

இளைஞன் தளராமல் சில நண்பர்களைத்தொடர்பு கொள்கிறார். உடலை பார்க்க பயந்த உறவினர்கள் உதவி செய்ய முன்வந்தனர். ஒரு வழியாக அடையாள அட்டைகள் வந்து சேர்ந்தன. ஆனால், நேரம் இருட்டி விட்டதால் உடல்களை எடுக்க முடியாமல் போனது.

மறுநாள் ஞாயிறு. மருத்துவமனைக்கு வந்த இளைஞன் இருவரின் உடல்களையும் பிணவறையில் இருந்து வாங்கி, பெசன்ட் நகர் மின் மயானத்திற்குக்கொண்டு செல்கிறார்.

அரசு அனுமதித்த இரண்டு உறவினர்கள் முன்னிலையில் கடைசிச் சடங்குகள் நடந்தன.

இளைஞன் என்ன நினைத்தாரோ தெரியவில்லை. "அந்த அம்மா உடலை முதல்ல தகனம் செய்யுங்க.

அவங்க வழக்கப்படி தீர்க்க சுமங்கலியா போய்ச்சேரணும்னுதான் அவங்க ஆசைப்பட்டிருப்பாங்க" என்கிறார்.

மயான ஊழியர்களும் நெகிழ்ந்து போகிறார்கள். 'மனிதம் என்கிற மகத்தான உணர்வு தொற்றாக பரவினால் கொரோனா போன்ற வைரஸ்களால் என்ன கிழிக்க முடியும்?' என்று தோன்றி இருக்கலாம்.

திருப்தியுடன் ராயப்பேட்டை சென்று மகளிடம் சொல்கிறார் இளைஞன். இருவரினது உடல்களும் தகனம் செய்தாச்சு என அந்த பிராமணப் பெண்மணி கண்ணீரால் நன்றி சொல்கிறார்.

எல்லாப் புகழும் இறைவனுக்கே என்பது போல் கைகளை உயர்த்திக் காட்டி விடை பெற்றுச் செல்கிறார் முகமது அலி ஜின்னா.

அடுத்து யாருக்கு உதவ அல்லா ஆணையிடப் போகிறான் என்ற சிந்தனையுடன்.

## ஒமிக்ரோன் துணை வைரஸ் அமெரிக்காவில் ஆதிக்கம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் ஒமிக்ரோன் துணை வைரஸ் ஆதிக்கம் செலுத்துகிறது. அங்கு கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களில் 54.9 சதவீதத்தினர் பிஏ.2 வைர ஸால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவில் ஒமிக்ரோனை விட இந்த துணை வைரஸ் வேகமாக பரவுகிற தன்மையைக் கொண்டுள்ளது. குறிப்பாக பிஏ.2 வைரஸ், அசல் பிஏ.1 வைரஸை விட 30 சதவீதம் அதிகமாகப் பரவும்.

கடந்த 26 ஆம் திகதியுடன் முடிந்த ஒரு வார காலத்தில், அமெரிக்காவில் 54.9 சதவீதத்தினர் பிஏ.2 வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# புதிய தா

## ஆதாரங்க

(கீவ்)

உக்ரைனின் கிழக்

வருவதாக உக்

தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அறிக்கை ஒன்றை விடுத்துள்ள அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைனின் கிழக்கில் உள்ள டான்பாஸில் பகுதியில் புதிய ரஷ்ய துருப்புகள் குவிக்கப்பட்டுள்ளதாக குறித்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் உக்ரைன் தலைநகர் கீவ் மற்றும் செர்னிகீவ் ஆகிய

# உக்ரைனில் மரியுபோலில் பே

# அறிவித்தது ரஷ்

(மொஸ்கோ)

மரியுபோல் நகரில் இருந்து அகதிகளாக வெளியேறும் மக்களை ரஷ்ய படைகள் தடுத்து வருவதாக உக்ரைன் குற்றம்சாட்டிய நிலையில் போர் நிறுத்தம் அறிவிப்பு வெளியாகியுள்ளது.

உக்ரைன் நாட்டை கடும் சேதத்துக்குள்ளாக்கி இருக்கும் ரஷ்யா தொடுத்துள்ள போர் நேற்று 36 ஆவது நாளை எட்டியுள்ளது. ரஷ்ய படைகளின் தொடர் தாக்குதலால் உக்ரைனின் துறைமுக நகரான மரியுபோல் முற்றிலும் உருக்குலைந்து காணப்படுகிறது.

அங்கு 90 சதவீதத்துக்கும் மேல் கட்டடங்கள் இடிந்தன. 4 இலட்சம் பேர் வசித்த அந்நகரில் இருந்த மக்கள் வெளியேறியுள்ள நிலையில் இன்னும் 1.60 இலட்சம் பேர் சிக்கி உள்ளனர்.



அவர்கள் அங்கிருந்து வெளியேற முடியாமல் தவித்து வருகிறார்கள்.

மேலும் அவர்களுக்கு உணவு, தண்ணீர் போன்ற அத்தியாவசிய பொருட்கள் எதுவும் கிடைக்கவில்லை. இதனால் பசி, பட்டினியுடன் உயிர் பயத்தில் கட்டடங்களின் அடித்தளங்களில் தங்கி உள்ளனர். மரியுபோல் நகரில் இருந்து அகதிகளாக வெளியேறும் மக்களை ரஷ்ய படைகள் தடுத்து வருவதாக உக்ரைன் குற்றம் சாட்டி உள்ளது.

# ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் இந்தியாவிற்கு விஜயம்

(டில்லி)

ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் சேர்ஜி லெவ் ரோவ் இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ளார்.

இரண்டு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு அவர் இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

ரஷ்யாவுடனான பேச்சுவார்த்தை தொடர்பில் ஆழ்ந்த அதிருப்தியடைந்துள்ளதாக அமெரிக்கா மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் இந்தியாவை விமர்சித்துள்ளன.

அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளினால் ரஷ்யாவுக்கு எதிராக

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# தாக்குதலுக்கு தயாராகிறது ரஷ்யா

## களுடன் வெளிப்படுத்தினார் ஜெலன்ஸ்கி

**ிழக்கு பகுதியில் ஒரு ரஷ்யா புதிய தாக்குதலுக்கு தயாராகி க்ரைன் ஜனாதிபதி வெலோடிமிர் ஜெலென்ஸ்கி ார்.**



பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகளை குறைப்பதற்கான ரஷ்யாவின் அறிக்கையில் சந்தேகம் நிலவுவதாகவும் உக்ரைன் ஜனாதிபதி தெரிவித்தார்.

எதனையும் விட்டுக்கொடுக்க போவதில்லை எனவும் நாட்டின் ஒவ்வொரு நபருக்காகவும் போராடுவோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையிலான அடுத்த சுற்று அமைதிப் பேச்சுவார்த்தை இன்று இடம்பெறவுள்ளது.

தொலைக்காணொளி ஊடாக இந்த பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளதாக உக்ரைன் தரப்பில் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் டேவிட் அராகாமியா தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு கருத்துரைத்த அவர், இரு நாடுகளின் தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பை உக்ரைன் முன்மொழிந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

எனினும், ரஷ்ய தரப்பு அதனை மறுத்து விட்டதாக டேவிட் அராகாமியா தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலில் ரஷ்யா - உக்ரைன் தலைவர்களுக்கு இடையிலான சந்திப்பு குறித்து முன்னேற்றம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## போர் நிறுத்தம் ரஷ்யா



இந்தநிலையில் மரியுபோல் நகரில் பொது மக்கள் பாதுகாப்பாக வெளியேறுவதற்காக மனிதாபிமான அடிப்படையில் நேற்று போர் நிறுத்தம் அமுல்படுத்தப்படுவதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

இந்தநிலையில் ரஷ்யா- உக்ரைன் நாடுகளுக்கு இடையே நேற்று மீண்டும் பேச்சுவார்த்தை ஆரம்பமானது. இதுவரை நடந்த பேச்சுவார்த்தையில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

விதிக்கப்பட்டுள்ள தடைகளை குறைத்து மதிப்பிடும் ரஷ்யாவின் முன்மொழிவை இந்தியா கருத்தில் கொண்டுள்ளதாகவும் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

விளாடிமிர் புடினின் யுத்தத்திற்கு உதவி புரிவதை தவிர்த்து சரியான நிலைப்பாட்டை எடுப்பதற்கான சந்தர்ப்பம் இதுவெனவும் சுதந்திரம், ஜனநாயகம் மற்றும் இறைமையுடன் உக்ரைனிய மக்களுடன் நிற்பதற்கான காலம் இதுவெனவும் அமெரிக்க வர்த்தக அமைச்சர் கினா ரெய் மொன்டோ தெரிவித்துள்ளார். (நி)


## பின்னடைவை சந்திக்கும் ரஷ்யா

### புடினிடம் தவறான தகவல்களை சொல்லும் ஆலோசகர்கள்

## அமெரிக்கா தகவல்

(வோஷிங்டன்)

உக்ரைனில் ரஷ்ய இராணுவம் எவ்வளவு மோசமாகச் செயற்படுகிறது மற்றும் பொருளாதாரத் தடைகளால் ரஷ்யா எப்படி முடங்கிக் கிடக் கிறது என்பது பற்றி புடினிடம் தவறான தகவல்கள் சொல்லப்படுகிறது என அமெரிக்கா தெரிவித்துள்ளது.



உக்ரைன் மீது ரஷ்யா தொடங்கிய போர் ஒரு மாதத்தை கடந்துள்ள நிலையில் தலைநகர் கீவ், கார்கிவ் உள்ளிட்ட முக்கிய நகரங்களை ரஷ்யப் படையால் கைப்பற்ற முடியவில்லை.

உக்ரைன் இராணுவ வீரர்கள் கடும் சவால் அளித்து வருவதால் ரஷ்ய இராணுவத்தால் முன்னேற முடியவில்லை. உக்ரைனில் ரஷ்ய படைகள் பின்னடைவை சந்தித்து வருவதாக அமெரிக்கா, இங்கிலாந்து தெரிவித்துள்ளன.

இந்த நிலையில் ரஷ்ய ஜனாதிபதி புடின் அவரது நாட்டு இராணுவத்தினரால் தவறாக வழிநடத்தப்படுவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.


இது குறித்து அமெரிக்க வெள்ளை மாளிகை செயலாளர் கேட் பெடிங்பீல்ட் கூறியதாவது, ரஷ்ய ஜனாதிபதி புடின், அவரது இராணுவத்தால் தவறாக வழிநடத்தப்பட்டதாக உணர்ந்துள்ளதாக எங்களுக்கு தகவல் கிடைத்துள்ளது. இது உக்ரைன் போருக்கிடையில் புடினுக்கும், அவரது இராணுவ தலைமைக்கும் தொடர்ந்து பதற்றமான நிலையை ஏற்படுத்தியுள்ளது.

உக்ரைனில் ரஷ்ய இராணுவம் எவ்வளவு மோசமாகச் செயற்படுகிறது மற்றும் பொருளாதார தடைகளால் ரஷ்யா எப்படி முடங்கிக் கிடக்கிறது என்பது பற்றி புடினிடம் தவறான தகவல்கள் சொல்லப்படுகின்றன என்று நாங்கள் நம்புகிறோம்.

ஏனென்றால் புடினின் மூத்த ஆலோசகர்கள் அவரிடம் உண்மையை சொல்லப் பயப்படுகிறார்கள். புடின் தொடங்கிய போர் தவறானது என்பது தெளிவாகி இருக்கிறது. இது ரஷ்யாவை நீண்ட காலத்துக்கு பலவீனப்படுத்தும். மேலும் உலக அரங்கில் இருந்து தனிமைப்படுத்துவது அதிகரிக்கும் என்றார்.

மேலும் தன்னிடம் தவறான தகவல்களை கூறியதால் புடின் ஆத்திரத்தில் இருப்பதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது. (நி)

## விண்வெளி நிலையத்தில் 355 நாட்கள் தங்கியிருந்து சாதனை



(வோஷிங்டன்)

சர்வதேச விண்வெளி நிலையத்தில் 355 நாட்கள் தங்கியிருந்து பணியாற்றிய அமெரிக்க விண்வெளி வீரர் மார்க் வேண்ட் ஹே (வயது-55) ரஷ்ய விண்கலத்தில் நேற்று முன்தினம் புதன் கிழமை பூமிக்குத் திரும்பினார்.

கடந்த ஆண்டு ஏப்ரல் 9 ஆம் திகதி சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு மார்க் வேண்ட் ஹே சென் றார்.

அங்கு 355 நாட்கள் அவர் தங்கியிருந்தார். இந் நிலையில், தனது விண் வெளி பயணத்தை நிறைவு செய்து கொண்டு, ரஷ்ய விண் கலமான சோயுஸ் எம்எஸ்-19 இல் அவர் நேற்று முன் தினம் புதன்கிழமை பூமி திரும்பினார்.

இதன்மூலம் சர்வதேச விண்வெளி நிலையத்தில் அதிக நாட்கள் தங்கியிருந்து பணி செய்த வீரர் என்ற சாதனையை மார்க் வேண்ட் ஹே படைத்தார். இதற்கு முன்பு ஸ்கொட் கெல்லி என்பவரே விண்வெளியில் தொடர்ந்து 340 நாட்கள் தங்கியிருந்ததே சாதனையாக இருந்தமை குறிப்பி டத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எகிறும் விலைவாசிக்கு எதிராக கவனயீர்ப்பு போராட்டம்



(நெளுக்குளம்)

வாழ்க்கைச்சுமை மற்றும் உணவுப் பொருட்களின் விலை ஏற்றத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று நேற்று வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் முன்னெடுக்கப்பட்டது.

அத்தியாவசிய மற்றும் உணவுப் பொருட்கள் விலை ஏற்றத்திற்கு எதிராகவும் ராஜபக்ஷாக்களின் அரசாங்கத்தை விரட்டியடிக்கும் நடவடிக்கையாகவும் இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மண்ணெண்ணெய், பெற்றோல், சமையல் எரிவாயு, பானைகள், மின்சார உபகரணங்கள் போன்ற சமையலறை உபகரணங்களை சுமந்து வந்து இப்போராட்டத்தை மேற்கொண்டனர். வாழ்க்கைச்சுமை அதிகரிப்பு பொருளாதாரச் சுமைகளைத் தாங்கிய பதாகைகளையும் ஏந்தியவாறு போராட்டத்தை மேற்கொண்டனர்.

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் ஏற்பாட்டில் ஏனைய தமிழ் அமைப்புக்களும் இணைந்து இப்போராட்டத்தை முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது. (5-6-299)

## எல்லை தாண்டிய மீனவர்களைத் தாக்கிய கடற்படையினர்

(முறிகண்டி)

தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தமிழகத்தின் தஞ்சாவூர் மாவட்டம் மல்லிப்பட்டின மீனவர்கள் கோடியக்கரைக்கு தென் கிழக்கே மீன்பிடித்துக் கொண்டிருந்த போது இலங்கை கடற்படையினரால தாக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மீனவர்கள் கடலில் விரித்திருந்த 300 கிலோ வலைகளை வெட்டி விட்டு விட்டு படகில் இருந்த செல்போன், கயிறு, டார்ச் லைட் உள்ளிட்ட பொருட்களை எடுத்துச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. காயமடைந்த மூவரும் வேதாரண்யம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (5-6-100-285)

## தரம் பிரிக்காத வீட்டுக் கழிவுகளால் துர்நாற்றம் வீசும் வீதிகள்

(நெளுக்குளம்)

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தை அண்மித்த பகுதி மற்றும் கற்குழி ஆகிய இடங்களில் நீண்ட நாட்களாக வீட்டுக் குப்பைகள் அகற்றப்படாத காரணத்தினால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுகின்றது எனவும் அவற்றை அகற்றுவதற்கு நீண்ட நாட்களாக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் அப்பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

கற்குழி நகரசபை உறுப்பினரிடம் இது தொடர்பாக கேட்ட போது, குப்பைகளைத் தரம் பிரித்து பைகளில் கட்டி வைக்குமாறு நகரசபை ஊழியர்களினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டும் மக்கள் அதனைப் பின்பற்றவில்லை எனவும் சபைக்கு இது குறித்து முறைப்பாடு கிடைத்துள்ளதாகவும் அவற்றை தரம் பிரித்து அகற்றுவதற்கு தாமதம் ஏற்படும் எனத் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது. (5-6-299)

# இந்திய மீனவர்களுடன் இனி பேச்சுவார்த்தை இல்லை

## வட மாகாண கடற்றொழிலாளர் இணையம்

(மன்னார்)

இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பாக எங்களால் மேற்கொள்ளப்பட்ட அனைத்து செயற்பாடுகளும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளதோடு, எமது முயற்சிகள் வெற்றியளிக்கப்படாமல் இருக்கின்றது என வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் பேச்சாளர் என்.எம்.ஆலம் தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய மீனவர்களின் அத்து மீறல்கள் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பாக எங்களால் மேற்கொள்ளப்பட்ட அனைத்து செயற்பாடுகளும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளதோடு, வெற்றி அளிக்கப்படாமல் இருக்கின்றது. நாங்கள் தொடர்ச்சியாக பேச்சுவார்த்தைகளையும் ஆர்ப்பாட்டங்களையும் நடத்திய போதும் இன்னும் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் குறைவடையவில்லை.

புதிதாக உருவாக்கப்பட்ட அரசாங்கத்தின் ஊடாக இதற்கு நல்லதொரு தீர்வு கிடைக்கும் என்று நம்பி இருந்த போதும் உரிய கடற்றொழில் அமைச்சரினால் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இரண்டு வருடங்கள் கடந்தும் அதற்கான எந்த ஒரு தீர்வும் கிடைக்கவில்லை. அண்மையில் கச்சதீவில் இந்திய மீனவர்களுடன் ஒரு கலந்துரையாடலை நடத்தி இருக்கிறார்கள். அந்தக் கலந்துரையாடலில் உரிய விடயங்கள் எதுவும் பேசப்படவில்லை. ஆனால் இந்திய தரப்பால் இலங்கை மீனவர்களுடன் பேசுவோம். பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வோம் என்று அவர்கள் தரப்பில் கூறப்படுகிறது.

வட பகுதி மீனவர்கள் என்ற வகையில் இந்திய தமிழக மீனவர்களுடன் எந்த ஒரு பேச்சுவார்த்தையிலும் கலந்து கொள்ளப் போவதில்லை என்ற செய்தியை நாங்கள் பதிவு செய்து கொள்ள விரும்புகிறேன் எனத் தெரிவித்தார். (5-4-30)

## ஆரம்பப் பாடசாலை அமைக்க ஒருங்கிணைப்புக்குழு அங்கீகாரம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, உதயநகர் பகுதியில் வாழுகின்ற சிறார்களின் நன்மை கருதி, அப்பிரதேசத்தில் ஆரம்பப் பாடசாலை ஒன்றினை அமைப்பதற்கு கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதனடிப்படையில், அனைத்து மதங்களையும் சேர்ந்த சுமார் 800 மாணவர்கள் ஆரம்பக் கல்வியை கற்கக் கூடிய வகையில் 'நாவலர் ஆரம்பப் பாடசாலை' உருவாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி மாவட்டத்தின் 2022 ஆம் ஆண்டிற்கான இரண்டாவது ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது மாவட்டத்தின் பல்வேறு பிரச்சினைகள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பில் ஆராயப்பட்டதுடன் பிரச்சினைகளுக்கான தீர்வுகளும் எட்டப்பட்டன. (5-6-104)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 240 | 200 | 200 | 240 |
| உருளைக்கிழங்கு | 160 | 170 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 300 | 250 | 250 | 300 |
| தக்காளி | 60 | 60 | 80 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 130 | 100 | 100 |
| கோவா | 80 | 80 | 100 | 100 |
| கரட் | 120 | 200 | 200 | 200 |
| பூசணி | 50 | 70 | 80 | 100 |
| புடோல் | 140 | 100 | 120 | 120 |
| வாழைக்காய் | 50 | 50 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 220 | 180 | 100-250 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 170 | 180-220 | 250 |
| பாகற்காய் | 280 | 300 | 300 | 300 |
| வெண்டிக்காய் | 80 | 140 | 140 | 250 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 100 | 120 |
| பயற்றங்காய் | 300 | 280 | 250 | 200 |
| லீக்ஸ் | 160 | 120 | 140 | 200 |
| பீற்றூட் | 140 | 140 | 130 | 160 |
| கறிமிளகாய் | 200 | 200 | 200 | 240 |
| முருங்கைக்காய் | 1400 | 1200 | 1000 | 1200 |
| போஞ்சி | 200 | 250 | 220 | 280 |
| கத்தரிதம்புள்ள | 200 | 140 | -- | 220 |
| கீரை - 1 பிடி | 80 | 70 | 80 | 80 |
| தேசிக்காய் | 160 | 120 | 180 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 50-80 | 70-90 |
| இராசவள்ளி | 200 | 160 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 180 | 180 | -- | 280 |
| முள்ளங்கி | 60 | 100 | 80 | 180 |
| பொன்னாங்காணி | 60 | 70 | 80 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 30 |
| ஈரப்பலா | -- | -- | -- | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராகு-கேது பெயர்ச்சிப் பலன்கள்

## 21.03.2022-07.10.2023

## மூன்றில் வருகிறது ராகு; முன்னேற்றப்பாதை தேடி வரும்

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



(அவிட்டம் 3, 4 பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 பாதங்கள் வரை)

**பெயரின் முதல் எழுத்துக்கள்: கு, கூ, கோ, ஸி, ஸீ, ஸே, ஸோ, தா உள்ளவர்களுக்கும்**

**கும்ப இராசி வாசகர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 4 ஆம் இடத்தில் அர்த்தாஷ்டம ராகுவாக சஞ்சரித்து வந்த ராகு பகவான், மார்ச் 21 ஆம் திகதி முதல் 3 ஆம் இடமான வெற்றிகள் ஸ்தானத்திற்கு வந்திருக்கிறார். அதேசமயம் கேது பகவான் உங்கள் இராசிக்கு 9 ஆம் இடமான பிதுர்ரார்ஜித ஸ்தானத்திற்கு வரப்போகிறார். சுமார் ஒன்றரை ஆண்டு காலம் ராகுவும், கேதுவும் அதே இடத்தில் சஞ்சரித்து, அங்குள்ள நட்சத்திரப் பாதசாரங்களுக்கு ஏற்ப பலன்களை வழங்குவார்கள்.

**மூன்றாம் இடத்தில் ராகு, ஒன்பதாம் இடத்தில் கேது**

இந்த ராகு-கேது பெயர்ச்சியில், உங்கள் இராசிக்கு மூன்றாம் இடத்திற்கு வருகிறார் ராகு பகவான். அந்த இடத்திற்கு ராகு வரும்பொழுது வீரத்தோடும், விவேகத்தோடும் செயற்படுவீர்கள். வெற்றிக்குரிய வாய்ப்புகள் வந்து சேரும். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். பங்காளிப் பகை மாறும். 9 இல் சஞ்சரிக்கும் கேதுவால் பூர்வீக சொத்துக்களில் இருந்த வில்லங்கங்கள் விலகும். தந்தை வழி ஆதரவு கிடைக்கும். உத்தியோகத்தில் பதவி உயர்வு பற்றிய நல்ல தகவல் வரும். வீடு, வாகனம் வாங்கும் முயற்சி கைகூடும். வேற்று மனிதர்களின் ஒத்துழைப்பால் உங்கள் கூட்டு முயற்சியில் வெற்றி காண்பீர்கள். குலதெய்வ வழிபாடும், இஷ்ட தெய்வ வழிபாடும் உங்கள் குடும்ப முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்.

**சூரிய சாரத்தில் ராகு சஞ்சாரம் (21.3.2022 முதல் 22.5.2022 வரை)**

கார்த்திகை நட்சத்திரக் காலில் சூரியனின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, குடும்பத்தில் மகிழ்ச்சியும், சுபிட்சமும் நிறைந்திருக்கும். திருமண வயதடைந்தவர்களுக்கு நல்ல வரன்கள் கிடைக்கும். பணியில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு மட்டுமல்லாமல் ஊதிய உயர்வும் கிடைக்கும். சப்தமாதிபதியாக சூரியன் இருப்பதால், எதை எந்த நேரத்தில் செய்ய நினைத்தீர்களோ, அதை அந்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். திடீர் தனவரவும் உண்டு. ஒரு சிலருக்கு அரசு வழியில் கௌரவப் பதவிகள் கிடைக்கலாம். வெளிநாட்டில் உள்ள தொழில் நிறுவனங்களில் இருந்து ஒரு சிலருக்கு அழைப்புகள் வரலாம்.

**சுக்கிரன் சாரத்தில் ராகு சஞ்சாரம்(23.5.2022 முதல் 28.1.2023 வரை)**

பரணி நட்சத்திரக் காலில் சுக்கிரனின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, உங்களுக்கு யோகம் நிறைந்த நேரம் ஆகும். மனக்குழப்பங்கள் அகலும். மதிப்பும், மரியாதையும் உயரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பூர்வீகச் சொத்துக்களை முறையான பாகப்பிரிவினைகள் செய்து கொண்டு அதில் கட்டடம் கட்டும் முயற்சி கைகூடும். ஆரோக்கியத் தொல்லை அகலும். அதிர்ஷ்ட வாய்ப்புகள் இல்லம் தேடிவரும். ஆபரணங்களை வாங்கி மகிழ்வீர்கள். புதிய வாகனங்கள் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு கேட்ட சலுகைகள் கிடைக்கும். பிள்ளைகளின் திருமணப் பேச்சுக்கள் கைகூடும்.

**கேதுவின் சாரத்தில் ராகு சஞ்சாரம்(29.1.2023 முதல் 7.10.2023 வரை)**

அச்சுவினி நட்சத்திரக் காலில் கேதுவின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, சகோதர ஒற்றுமை பலப்படும். விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்திணைவர். பணவரவில் இருந்த தடைகள் அகலும். குடும்பத்தில் இருந்த கருத்து வேறுபாடுகள் நீங்கும். தொழில் வளர்ச்சியை முன்னிட்டு நவீனப் பொருட்களை, இயந்திரங்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். போட்டிக் கடை வைத்தோர் விலகுவர். எதிர்பார்த்த இலாபம் எளிதில் கிடைக்கும். நீண்ட நாட்களாக எதிர்பார்த்து நடைபெறாத காரியமொன்று இப்பொழுது நடைபெறலாம். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும்.

**குரு சாரத்தில் கேது சஞ்சாரம்(21.3.2022 முதல் 25.9.2022 வரை)**

விசாக நட்சத்திரக் காலில் குருவின் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, மிகவும் அற்புதமான நேரமாக அமையும். தன-லாபாதிபதியாக குரு இருப்பதால் தைரியமும், தன்னம்பிக்கையும் கூடும். பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். புதிய தொழில் தொடங்கும் முயற்சியில் வெற்றி கிடைக்கும். ஆதாயம் தரும் தகவல்களை அதிகமாகவே கேட்டு மகிழ்வீர்கள். 'போதிய வருமானம் இல்லையே' என்று நினைத்தவர்களுக்கு இப்பொழுது புதிய வாய்ப்பு கைகூடி வரும். குடும்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சம்பாதிக்கும் வாய்ப்பு உண்டு. தூர தேசப் பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**ராகு சாரத்தில் கேது சஞ்சாரம்(26.9.2022 முதல் 3.6.2023 வரை)**




சுவாதி நட்சத்திரக் காலில் ராகுவின் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, சகோதர ஒற்றுமை பலப்படும். உள்ளம் மகிழும் சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறும். உதிரி வருமானங்கள் உண்டு. புதிய தொழில் தொடங்கும் முயற்சியில் புகழ்மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து பல நல்ல காரியங்களை முடித்துக் கொடுப்பர். என்றைக்கோ வாங்கிப் போட்ட இடம் இப்பொழுது நல்ல விலைக்கு விற்று மகிழ்ச்சி தரும். நண்பர்கள் உங்களுக்கு உதவி செய்ய காத்திருப்பர். தொழிலை விரிவுசெய்ய உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வுடன் இடமாற்றம் வரலாம்.

**செவ்வாய் சாரத்தில் கேது சஞ்சாரம்(4.6.2023 முதல் 7.10.2023 வரை)**

சித்திரை நட்சத்திரக் காலில் செவ்வாயின் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் இந்தக் காலத்தில் தைரியமும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். தடைகற்கள் அகலும். கொடுக்கல் வாங்கல்களில் திருப்தி ஏற்படும். சங்கிலித் தொடர்போல வந்த கடன் சுமை இப்பொழுது குறையலாம். தொழிலில் நெருக்கடிகள் இருந்தாலும் முதலீட்டை எடுத்துவிட முடியும். மாற்று இனத்தவர் உங்களுக்கு ஒத்துழைப்பு செய்வர். மக்கள் செல்வாக்கு அதிகரிக்கும். 'வீடு வாங்க வேண்டும் அல்லது கட்டிய வீட்டைப் பழுது பார்க்க வேண்டும்' என்று நினைத்தவர்களுக்கு, அது நிறைவேறும். பெற்றோர்களின் உடல்நலம் சீராகும்.

**குருப்பெயர்ச்சிக் காலம்**

இந்த ராகு-கேது பெயர்ச்சிக் காலத்தில், குரு பகவான் இரண்டு முறை பெயர்ச்சியாகிறார். அதன்படி வருகிற ஏப்ரல் 13 ஆம் திகதி மீன இராசிக்கு செல்லும் குரு, அங்கிருந்து உங்கள் இராசிக்கு 6, 8, 10 ஆகிய இடங்களைப் பார்க்கப் போகிறார்.

எனவே உத்தியோகத்தில் எதிர்பார்த்த மாற்றம் கிடைக்கும். இழந்த பதவிகளை மீண்டும் பெறுவீர்கள். செய்தொழிலில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பணியாளர்களின் தொல்லை அகலும். அடுத்ததாக 22.4.2023 அன்று மேஷத்திற்கு பெயர்ச்சியாகி, உங்கள் இராசிக்கு 7, 9, 11 ஆகிய இடங்களைப் பார்க்கப் போகிறார். எனவே சுபச்செலவுகள் அதிகரிக்கும். மங்கல ஓசை மனையில் கேட்கும். மகப்பேறுக்காக காத்திருப்பவர்களுக்கு மழலைச் செல்வம் கிடைக்கலாம். ஆரோக்கியம் சீராகும்.

**சனிப்பெயர்ச்சிக் காலம்**

16.3.2023 அன்று கும்ப இராசிக்கு சனி பகவான் பெயர்ச்சியாகிறார். உங்கள் இராசிநாதன், உங்கள் இராசிக்கு வரும் இந்த நேரம் ஏழரைச் சனியில் ஜென்மச் சனியாக வருகிறது. எனவே கவனம் செலுத்த வேண்டிய நேரம் இது. அதிக விரயங்கள் ஏற்படும். குடும்ப உறுப்பினர்கள் உங்கள் குணமறிந்து நடந்துகொள்ள மாட்டார்கள். கடுமையாக முயற்சித்தும் சில காரியங்கள் கைகூடாமல் போகலாம். சொத்து தகராறுகள், சொந்த பந்தங்களுடன் கருத்து வேறுபாடுகள் அதிகரிக்கும். ஏழரைச் சனியில் இரண்டாவது சுற்று நடைபெறுபவர்களுக்குப் பெரிய பாதிப்புகள் ஏற்படாது.

**பெண்களுக்கான பலன்கள்**

இந்த ராகு - கேது பெயர்ச்சி உங்களுக்கு வருமானத்தைப் போதுமானதாக அமைத்துக் கொடுக்கும். சகோதரர்களால் நன்மை கிடைக்கும். கணவன் - மனைவிக்குள் அன்பும், பாசமும் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் வெற்றி உண்டு. பூமி வாங்கும் யோகம் ஏற்படும்.

பிள்ளைகளின் கல்யாண வாய்ப்பும், கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சியும் வெற்றி தரும். வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள். பணிபுரியும் பெண்களுக்கு எதிர்பார்த்தபடியே இலாகா மாற்றமோ, இடமாற்றமோ கிடைக்கலாம். குருப்பெயர்ச்சிக்குப் பிறகு பதவி உயர்வு உண்டு.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## இயல்பு மாறுமா!



(நேற்றைய தொடர்ச்சி)

அதைக் கண்ட அவனது தூரத்து உறவினன் தர்மலிங்கம் அவனைத் தன் வீட்டில் வைத்துக் கொள்ளலாமா என்று கேட்க வில்வநாதனிடம் வந்தான்.

வில்வநாதனும் "நீ மட்டும் வீராசாமியை உன் வீட்டில் வைத்துக் கொண்டு சாப்பாடு போட்டால் அவன் முழுச் சோம்பேறியாக ஆகிவிடுவான். அவனுக்குக் கைகள் உள்ளன. என்னிடம் அனுப்பு. ஏதாவது சிறு தொழில் செய்து சம்பாதிக்க அவனுக்கு வழி செய்கிறேன். அவனைத் தன் சொந்த சம்பாத்தியத்தில் வாழ விட்டு விடு" என்றான். தர்மலிங்கம் அது சரியே என நினைத்து வீராசாமியை வில்வநாதனிடம் ஒப்படைத்தான். வில்வநாதன் அவனைக் கூடை முடையவும் பாய்கள் தயாரிக்கவும் சொல்லி அவற்றிற்கு வேண்டிய மூங்கில், கோரை முதலியவற்றை வாங்கிக் கொடுத்தான். அவன் முடைந்த கூடைகளையும் பாய்களையும் நல்ல இலாபத்தில் விற்றுப் பணம் சம்பாதித்துக் கொண்டான்.

ஆனால் வீராசாமிக்கு இரண்டு வேளை சாப்பாடுதான் கிடைத்தது. முதலில் அவனுக்கு சாப்பாடு போடத் தயங்கிய வில்வநாதனின் மனைவி "இவனுக்கு இரண்டு வேளை சாப்பாடு போடுவதால் வீண் செலவு தானே! இவனை வீட்டில் வைத்துக் கொள்ள வேண்டாம். அனுப்பி விடுங்கள்" என்றாள்.

ஆனால் வில்வநாதனோ "அட பைத்தியமே. இவனுக்கு நாம் செலவிடும் பணத்தை விட இவன் முடைந்து கொடுக்கும் பாய்களாலும் கூடைகளாலும் நமக்கு நிறையப் பணம் கிடைக்கிறது. அதனால் அவனை வீட்டைவிட்டு அனுப்பினால் நமக்குத்தான் நட்டம் என்றான். வீராசாமியால் தன் கணவனுக்குப் பணம் கிடைப்பது கண்டு அவள் அவனுக்குச் சாப்பாடு போட்டு வந்தாள். அந்த ஊரில் பெருமாள் கோவில் கட்ட வேண்டும் என ரகுராமன் என்பவர் எண்ணினார். அவர் அது பற்றி வில்வநாதனிடம் கூறினார்.

வில்வநாதனோ "இப்போது இந்த ஊரில் ஒரு கோவில் இருக்கிறது. அதன் தர்மகர்த்தா நான் தான். அது சற்றுப் பழுதடைந்து இருப்பதால் அதைப் புதுப்பித்து விடலாம். எல்லாக் கடவுளும் ஒன்றுதானே.

நீ கோவில் கட்ட நினைக்கும் பணத்தை என்னிடம் கொடு. இருக்கும் கோவிலைச் சீர்படுத்தி விடலாம்" என்றான். ரகுராமன் வில்வநாதன் கூறியது கேட்டு "நீங்கள் கூறுவது சரி தான், நான் பெருமாள் கோவில் கட்டலாம் என நினைத்தேன்.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்




மாறி மாறி ஒலிக்கும் யாழும் குழலும் இசைப்பார் அற்று அசைவற்றுக் கிடந்தன; அரங்குகளில் ஆடல் மகளிர் அடியெடுத்து வைப்பதை நிறுத்திக் கொண்டனர்; நீர்நிலைகளில் வண்ண மகளிர் குடைந்து நீராடிப் பண்கள் மிழற்றுவதை நிறுத்தி விட்டனர்; பொன்னகை இழந்த மகளிர் புன்னகையையும் இழந்தனர்; அகிற்புகை, 'அடுப்புப் புகை, வேள்விப் புகை எல்லாம் புகை பிடிக்கக் கூடாது என்ற விளம்பரத்திற்கு அடிமையாகி விட்டன.

தெய்வங்கள் அந்த நகரில் தங்காமல் தேசாந்திரம் சென்று விட்டன; கோயில் மணிகள் நாவசைந்து நாதம் எழுப்பவில்லை; பயிர்கள் பசுமையை இழந்து விட்டன; தான் இருப்பது அயோத்திதான் என்பதை அவனால் கண்டுகொள்ள முடியவில்லை. நகரில் ஓவியத்தைக் காண முடிந்ததே அன்றி எந்தக் காவியத்தையும் காண முடியவில்லை; சிலைகள் அசைவதை மக்கள் அசைவில் கண்டான். அவனுக்கு வரவேற்பே இல்லை. வாழ்த்துகள் மலரவில்லை; அவன் தேரைக் கண்டதும் மக்கள் ஓரம் கட்டினர்; ஒதுங்கி மறைந்தனர்; அந்நிய நாட்டில் அடியெடுத்து வைத்து விட்டது போன்ற உணர்வு அவனுக்கு ஏற்பட்டது. தசரதன் மாளிகை நோக்கிப் பரதன் தேரைச் செலுத்தினான். அரண்மனைக் கட்டடங்கள் விதவைக் கோலத்தை விரும்பி ஏற்றுக்கொண்டன.

தசரதனை அவன் கண்கள் துருவித் தேடின. தசரதன் கண்கள் மூடிக்கிடந்தன. இவன் வந்ததைத் தசரதன் பார்க்க இயலவில்லை. பார்வையை இழந்தான். அதற்குள் பணிப்பெண் ஒருத்தி பரதன் முன் வந்து நின்றாள்; 'அன்னை உன்னை அழைக்கிறார்' என்றாள்; அதற்கு மேல் அவள் சொல்ல அனுமதி இல்லை.

தாயைக் காணச் சென்றான்; அங்கு பேய் ஒன்று நின்று பேசியது. "உன் தந்தைக்கு வானுலகத்தினின்று அழைப்பு வந்தது; மறுக்க முடியாமல் அவர் போய் விட்டார்" என்றாள். மங்கலமாகச் சொன்ன அச்சொற்களை அவனால் சுவைக்க முடியவில்லை.

இது முதலில் தோன்றிய மின்னல்; அடுத்து இடி ஒலியும் கேட்டது. "தவத்தை நாடித் தனயன் இராமன் வனத்துக்கு ஏகிவிட்டான்; பத்தினிப் பெண் ஆகையால், சீதையும் உடன் பயணம் மேற்கொண்டாள்; தம்பி யாகையால் அண்ணனை நம்பி இலக்குவனும் உடன் சென்றான்" என்றாள். முகத்திரை விலகியது; முழுமதியைக் காணவில்லை; பல்லவி முடிந்தது; அனு பல்லவி தொடர்ந்தது.

"உன்னை நாட்டுக்கு அரசனாக்கினேன்; என் வாழ்க்கை இலட்சியம் நிறைவேறிவிட்டது" என்றாள். "பாலூட்டி வளர்த்தவள் பழிதந்து அழிப்பாள்" என்று அவன் எதிர்பார்க்கவில்லை; அமுது என நினைத்து ஆலகால நஞ்சை அவள் தந்திருப்பதை அறிந்தான்; "பாற் கடலில் அமுதம் அன்றி, நஞ்சும் பிறக்கும்" என்ற கதையை அவள் மெய்ப்பித்து விட்டாள் என்பதை அறிந்தான்; பாசம் விளைவித்த நாசத்தை அறிந்தான்; தன் தாய் கொடுமை செய்வதில் தேர்ச்சி பெற்றிருக்கிறாள் என்பதை உணர்ந்தான்; மறுபடியும் அவள் முகத்தில் விழிக்க அவன் விழிகள் அஞ்சின; கோசலையிருக்கும் இடம் தேடி ஓடலானான்; "அரவுக்கு நஞ்சு பல்லில்; அன்னைக்கு நஞ்சு சொல்லில்" என்பதை உணர்ந்தான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல் அழியும், இமயம் அழியும், மண்ணும் விண்ணும், நீரும் நெருப்பும் பிறவும் அழியும். அழியா பொருள் எது? என்று நன்கு சிந்தித்து நோக்கினால் தருமம் ஒன்று தான் அழிவில்லாதது. –ஆன்மீக நோக்கு

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மக்களே! பெரும் பஞ்சத்தை வெல்லத் தயாராகுங்கள்

இன்றுவரை நாடு பரவாயில்லை என்று கூறலாம். ஆனால் நாளைய நிலைமை இன்னும் மோசமாகும் என்பதை அடித்துச் சொல்ல முடியும்.

ஆம், நாட்டின் பொருளாதார நிலைமை மிகவும் மோசமாகிவிட்டது.

அதாவது யுத்த காலத்து நிலைமையோடு ஒப்பிட முடியாதளவில் ஒட்டுமொத்தமாக இலங்கையில் பொருட் தட்டுப்பாடு ஏற்பட்டுவிட்டது.

அதிலும் குறிப்பாக, எரிபொருட் தட்டுப்பாடும் அதனூடாக ஏற்பட்டுள்ள மின்தடையும் இலங்கையின் தொழில் முயற்சியை ஸ்தம்பிக்க வைத்துள்ளது.

இந்நிலைமை பாதகமான சூழ்நிலையை மென்மேலும் ஊக்குவிப்பதாக அமையும்.

இவை ஒருபுறமிருக்க, இன்னும் சில நாட்களில் தங்கத்தினதும் அமெரிக்க டொலரினதும் பெறுமதிகள் இமயத்தைத் தொடும்.

அதேநேரம் உணவுப் பஞ்சம் ஏற்படுவதும் தவிர்க்க முடியாததாகியுள்ளது.

எனினும் பொதுமக்கள் இதனை உணர்ந்து கொள்வதாக இல்லை.

மாறாக, ஏற்படப்போகும் பெரும் பஞ்சத்தை பொதுமக்களுக்கு எடுத்துரைத்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் பல்கலைக்கழகப் புத்திஜீவிகளோ அன்றி அரச சார்பற்ற நிறுவனங்களோ தயாராக இல்லை. இந்த நிலைமை துரதிர்ஷ்டமானது.

உண்மையில் நாட்டின் இன்றைய பொருளாதார சூழ்நிலை குறித்த யதார்த்த நிலையையும் எதிர்காலத்தில் ஏற்படவிருக்கும் பேராபத்தையும் துறைசார் அறிஞர்களும் பொது அமைப்புகளும் பொதுமக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும்.

ஆனால் அந்தப் பணி காலம் உணர்ந்து செய்யப்படவில்லை.

இவ்வாறான விழிப்புணர்வு இன்மையால் நாட்டின் பொருளாதார நெருக்கடி ஓரிரு மாதங்களில் சரியாகிவிடும் எனச் சாமானிய மக்கள் நம்புகின்றனர்.

பொருளாதாரத்தின் கட்டமைப்பு, அதன் வீழ்ச்சி நிலை என்பன பற்றிய தெளிவின்மைகள் காரணமாக, சவால்களை எதிர்கொள்வதற்கு நம் மக்கள் தங்களைத் தயார்படுத்தாமல் இருப்பதை அவதானிக்க முடியும்.

எனவே துறைசார் நிபுணர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் நாட்டின் சமகால சூழ்நிலையைப் பொதுமக்களுக்கு எடுத்துரைத்து ஏற்படப்போகும் பஞ்சத்தை வெற்றி கொள்வதற்கான தயார்படுத்தல்களைச் செய்தாக வேண்டும்.

ஆம், தன் நாட்டு மக்களை இனத்தின் பேரால் கொன்றொழித்து கொடும் பாவத்தை செய்தவர்களால் ஒருபோதும் நிம்மதியாக ஆளவும் ஆட்சி செய்யவும் முடியாது.

அதுவே உண்மை. இந்த நிலையை உணர்ந்தேனும் எம் மக்கள் இலமென்று இருக்காது நிலமெங்கும் உணவுப் பயிர்கள் செய்து பெரும் பஞ்சத்தை வெல்ல வேண்டும்.

அதற்குத் தங்களை இன்றே தயார்படுத்துவது காலத்தின் தேவை.

# பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீள இலங்கை அசுர வேகத்தில் செயற்படவேண்டும் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர்

(கொழும்பு)

இலங்கை எதிர்நோக்கியுள்ள கடுமையான பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீள்வதற்கு அசுர வேகத்தில் செயற்படவேண்டும் என இந்திய வெளிவிவகார அமைச்சர், கலாநிதி எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இலங்கையிலிருந்து வெளியேறுவதற்கு முன்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே கலாநிதி எஸ். ஜெய்சங்கர் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் தற்போதைய நெருக்கடியிலிருந்து மீண்டுவர, உரிய காலத்திற்குள் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தற்போது காணப்படும் நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு இலங்கை மந்த கதியிலேயே செயற்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

திருகோணமலை எண்ணெய்த் தாங்கிகளின் அபிவிருத்தி நடவடிக்கைகள் உள்நாட்டு அமைச்சின் அறிவுறுத்தல்களுக்கு அமையவே முன்னெடுக்கப்படும் எனவும் இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம)

## பொருளாதார பிரச்சினை தொடர்பில் பிரதமர் தலைமையில் கலந்துரையாடல்

(கொழும்பு)

நாட்டில் நிலவும் பொருளாதார பிரச்சினைகள் தொடர்பில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

பொருளாதார வல்லுநர்களுடன் கலந்துரையாடி நாட்டு மக்களின் இயல்பு வாழ்க்கையை மீட்டெடுக்கவும், நீண்ட கால பொருளாதார மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகளை இனம் காண்பதே இந்த நிகழ்வின் முக்கிய நோக்கமாக காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த கலந்துரையாடலில் கலந்து கொண்ட பொது நிதிக் கொள்கைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் கபில சேனாநாயக்க 2020 மார்ச் மாதத்தின் பின்னர் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் கோவிட் தொற்று காரணமாக பொது சுகாதார சேவைகளின் செலவு அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார். (ம)

## நாட்டில் நேற்று மேலும் 178 பேருக்கு தொற்று

(கொழும்பு)

கொரோனா தொற்று உறுதியான மேலும் 178 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 661,631ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 7,918 பேர் சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.(ம)

## கோவிட்; 4 பேர் பலி

(கொழும்பு)

கொரோனாத் தொற்றுக்குள்ளான மேலும் நால்வர் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத் தகவல் திணைக்களம் நேற்று இரவு குறித்த தகவலை வெளியிட்டுள்ளது. (ம)

## வவுனியாவில் ஒரே நாளில் இரு ஆண்களின் சடலங்கள் மீட்பு

(வவுனியா)

வவுனியாவில் ஒரே நாளில் இரு ஆண்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

வவுனியா தவசிகுளம் பகுதியில் வீடு ஒன்றில் இருந்து குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் பொலிஸாரால் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

அதே பகுதியைச் சேர்ந்த 51 வயதுடைய மருதலிங்கம் நிமல்ராஜ் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இதேவேளை வவுனியா சிவபுரம் பகுதியில் உள்ள கிறிஸ்தவ ஆலயம் ஒன்றில் இருந்தும் 35 வயது ஆண் ஒருவரின் சடலம் காலை மீட்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-250)

## செட்டிகுளத்தில் குளவிக்கொட்டு; 15 பேர் பாதிப்பு

(வவுனியா)

செட்டிகுளம் - வீரபுரம் பகுதியில் குளவிக் கொட்டுக்கு இலக்காகி 15 பேர் பாதிப்படைந்துள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

செட்டிகுளம், வீரபுரம் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட சின்னத்தம்பனை கிராமத்தில் இடம்பெற்ற மரணச் சடங்கு ஒன்றின்போது சடலத்தை தகனம் செய்ய சுடுகாட்டுக்கு கொண்டு சென்றபோது மரம் ஒன்றில் இருந்து கலைந்து வந்த குளவிகள் அங்கு வந்தவர்கள்மீது கொட்டியதில் 15 பேர் பாதிப்படைந்துள்ளனர்.

இதனையடுத்து குளவிகள் அங்கிருந்து சென்ற பின்னரே சடலம் தகனம் செய்யப்பட்டுள்ளது.(ம-250)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### செய்தி வெள்ளம்

காவல்துறை உதவி ஆய்வாளர் பெருமித்ததுடன் குறிப்பிட்டார். "எங்களுக்கும் நடனமாட விருப்பம் தான்; ஆனால் எங்கள் சீருடை தடுத்துவிட்டது", என்று அங்கலாய்த்தனர் துவாரகை (ஸ்ரீ கிருஷ்ணனின் தலைநகர்) அந்தப் பழமையான நகரத்தின் தலைமை அர்ச்சகர்கள் குருஜியை அழைக்க வந்திருந்தனர். கோவிலில் தெய்வத்திற்குச் சாற்றிய ஒளி வீசும் அழகிய தலைப்பாகையை குருஜிக்கு அணிவித்து மரியாதை செய்தனர்.

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

திருக்கயிலாய மலையில் பார்வதி பரமேஸ்வரர் மீது விளையாட்டாக வில்வக் கிளையை உதிர்த்த குரங்கு அபுத்தி பூர்வமாகச் செய்த அச்சிவ புண்ணியத்தால் பூவுலகிற் பிறந்து, முசுகுந்தச் சக்கரவர்த்தி என்ற பெயருடன் மூவுலகும் ஆண்டது.

" வில்வக் கிளையுதிர்த்த வெய்ய முசுக் கலையைச்
செல்வத்துரை மகனாய்ச் செய்தனையே "
திருவருட்பா

இறை வழிபாடு செய்து மார்க்கண்டேயர் மறலியை வென்ற வரலாறு உலகம் அறிந்த ஒன்று.

ஆத்ம ஜோதியில் அருட்ஜோதி சூழ சிவஜோதி விளங்குகின்றது.

ஆத்ம ஜோதி- வட்டமாகிய கல்
அருட் ஜோதி- சூழ்ந்திருக்கிற ஆவுடையார்
சிவ ஜோதி- மேல் நோக்கிய இலிங்கம்
இதுதான் சிவலிங்கத்தின் உண்மை.
"ஜோதியுள் ஜோதியுள் ஜோதி"
என்பார் இராமலிங்க அடிகளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 32




### அம்பாந்தோட்டை மாவட்டம் பற்றிய தகவல்கள்

அம்பாந்தோட்டை மாவட்டம் 2,496 சதுர கிலோ மீற்றர் நிலப் பரப்பையும் 113 சதுர கிலோ மீற்றர் உள்ளக நீர்ப்பரப்பையும் கொண்டுள்ளது. இந்த மாவட்டத்தின் மொத்தப்பரப்பு 2,609 சதுர கிலோ மீற்றராகும். அது தென் மாகாண மொத்தப்பரப்பின் 47% ஆகும். வடக்குத் திசையில் இரத்தினபுரி மற்றும் மொனராகலை மாவட்டங்களையும் தெற்குத் திசையில் கடலையும் கிழக்கு திசையில் கடலையும் அம்பாறை மாவட்டத்தையும் மேற்குத் திசையில் மாத்தறை மாவட்டத்தையும் எல்லைகளாகக் கொண்டு அமைந்துள்ளது.

**அம்பாந்தோட்டை மாவட்டம் வடக்குத் திசையில் இரத்தினபுரி மற்றும் மொனராகலை மாவட்டங்களையும் தெற்குத் திசையில் கடலையும் கிழக்கு திசையில் கடலையும் அம்பாறை மாவட்டத்தையும் மேற்குத் திசையில் மாத்தறை மாவட்டத்தையும் எல்லைகளாகக் கொண்டு அமைந்துள்ளது. சனத்தொகை மற்றும் வீடுகள் கணக்கெடுப்பின் (2012) படி மாவட்டத்தின் சன அடர்த்தி ஒரு சதுர கிலோ மீற்றருக்கு 240 ஆகும்.**

சனத்தொகை மற்றும் வீடுகள் கணக்கெடுப்பின் (2012) படி மாவட்டத்தின் சன அடர்த்தி ஒரு சதுர கிலோ மீற்றருக்கு 240 ஆகும்.

### அம்பாந்தோட்டை மாவட்டம் இன மற்றும் சமய அடிப்படையில் சனத்தொகை வேறுபாடு -2012

இன மற்றும் சமய அடிப்படையில் சனத்தொகை வேறுபாடு அட்டவணை (k1) இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

அட்டவணை (k1): இன மற்றும் சமய அடிப்படையில் சனத்தொகை வேறுபாடு

அம்பாந்தோட்டை மாவட்டம்

| இனம் | எண்ணிக்கை | % | சமயம் | எண்ணிக்கை | % |
|---|---|---|---|---|---|
| சிங்களவர் | 582,301 | 97.1 | பௌத்தம் | 580,344 | 96.7 |
| இலங்கைத் தமிழர் | 2,105 | 0.3 | இந்து | 1,222 | 0.2 |
| இந்தியத் தமிழர் | 120 | 0.0 | இஸ்லாம் | 15,204 | 2.5 |
| இலங்கை முஸ்லிம் | 6,629 | 1.1 | உரோமன் கத்தோலிக்கம். | 1,139 | 0.2 |
| வேறு | 8,748 | 1.5 | வேறு கிருஸ்தவம் | 1,692 | 0.3 |
| | | | வேறு | 302 | 0.1 |
| மொத்தம் | 599,903 | 100 | மொத்தம் | 599,903 | 100 |

அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி சனத்தொகையில் பெரும்பான்மையினர் 97.1% சிங்களவர்கள் ஆவர். அவர்களில் பௌத்தர்கள் 96.7% ஆகும். இலங்கை முஸ்லிம்கள் 1.1% ஆகும். இஸ்லாமிய பக்தர்கள் 2.5% ஆகும். தமிழர்கள் (இலங்கை மற்றும் இந்தியா) மற்றும் இந்து பக்தர்கள் மாவட்ட சனத்தொகையில் 1% ஐ விட குறைவு.

அம்பாந்தோட்டைமாவட்டத்தில் பிரதேச செயலக மட்டத்தில் சிறுபான்மைச் சமூகங்கள்-2012

| பிரதேசச்செயலகம் | தமிழர் | முஸ்லீம் | வேறு |
|---|---|---|---|
| சூரியவெவ | 27 | 5 | 14 |
| லுணுகம்வெஹர | 88 | 272 | 468 |
| திஸ்ஸமஹாராம | 531 | 196 | 1599 |
| ஹம்பந்தோட்டை | 887 | 4000 | 5380 |
| அம்பலாந்தோட்டை | 297 | 373 | 1219 |
| அங்குணகொலபெலெஸ்ஸ | 10 | 3 | 9 |
| வீரகெட்டிய | 22 | 754 | 4 |
| கட்டுவண | 34 | 3 | 4 |
| வலஸ்முல்லா | 48 | 38 | 4 |
| ஓகேவெல | 4 | 18 | 4 |
| பெலியத்த | 99 | 16 | 5 |
| தங்கல்லை | 178 | 951 | 38 |
| மொத்தம் | 2225 | 6629 | 8748 |

### அம்பாந்தோட்டை மாவட்டத்தின் மாகாண சபைத் தேர்தல் தொகுதிகளுக்கான எல்லை நிர்ணயம் (2017)

மாகாண சபைத் தேர்தல் முதன்மைச் சட்டத்தின் படி தேர்தல் ஆணையாளரால், தென் மாகாணத்தின் அம்பாந்தோட்டை மாவட்டத்திற்கு 14 மாகாண சபை உறுப்பினர்கள் நிர்ணயிக்கப்பட்டனர். 2017 ஆம் திருத்தச்சட்டம் பகுதி 3 A (2) இன் படி அம்பாந்தோட்டை மாவட்டம் 7 மாகாண சபை உறுப்பினர்களை தெரிவு செய்யக்கூடிய வகையில் அத்தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட வேண்டி இருந்தது.

**மாகாண சபைத் தேர்தல் முதன்மைச் சட்டத்தின் படி தேர்தல் ஆணையாளரால், தென் மாகாணத்தின் அம்பாந்தோட்டை மாவட்டத்திற்கு 14 மாகாண சபை உறுப்பினர்கள் நிர்ணயிக்கப்பட்டனர். இதன்படி அம்பாந்தோட்டை மாவட்டம் 7 மாகாண சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்யக்கூடிய வகையில் அத்தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட வேண்டி இருந்தது.**

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 12 பிரதேச செயலகங்களுக்குட்பட்ட 576 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வசிக்கும் மொத்த சனத்தொகை 599, 903 இல் இருந்து ஒற்றை அங்கத்தவர் தொகுதிக்கு உறுப்பினரை தெரிவு செய்வதற்கான சராசரி சனத்தொகை 85,700 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

**அம்பாந்தோட்டை மாவடடத்தில் 12 பிரதேச செயலகங்களுக்குட்பட்ட 576 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வசிக்கும் மொத்த சனத்தொகை 599,903 இல் இருந்து ஒற்றை அங்கத்தவர்தொகுதிக்கு உறுப்பினரை தெரிவு செய்வதற்கான சராசரி சனத்தொகை 85,700 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.**

அம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தில் 08.12.2017 மாலை பொதுமக்களுடன் நடைபெற்ற கூட்டத்தில், பெற்றுக்கொள்ளப்பட்ட 04 பிரேரணைகளுடன், பொதுமக்களிடம் எழுத்து மூலம் சமர்ப்பிக்கும்படி கேட்டுப் பெற்றுக்கொள்ளப்பட்ட 02 பிரேரணைகள் அடங்கலாக மொத்தம் 06 சமர்ப்பிப்புகளை குழு பெற்றுக் கொண்டது. சில சமர்ப்பிப்புகளில் பரிந்துரைக்கப்பட்டிருந்ததாவது, தேர்தல் தொகுதிகளின் எல்லை நிர்ணயம் பிரதேச செயலகங்களின் ஒருங்கிணைப்பு அல்லது பிரதேச செயலகப்பகுதிகளின் ஒருங்கிணைப்பு, உள்ளூர் அதிகாரசபை எல்லைகளையும், பழைய பாராளுமன்றத் தொகுதிகளின் எல்லைகளையும் (தற்போதைய வாக்கெடுப்புப் பிரிவுகளை) அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என்பதே ஆகும்.

சமர்ப்பிப்புகள் இவ்வாறு இருந்தபோதும் அனைத்து மக்கள் தொகை தகவல்களும் நிர்வாகப் பிரிவுகள் மட்டத்தில் மட்டுமே கிடைக்கப்பெற்றன. அதாவது, கிராம உத்தியோகத்தர் பிரிவுத்தகவல், பிரதேச செயலக பிரிவுத்தகவல் ஆகும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12 மணி...

மணிநேர மின்தடை அமுலாக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் இலங்கை மின்சார சபை முன்வைத்த கோரிக்கைக்கு, அனுமதி வழங்கியுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ABCDEF வலயங்களில் அதிகாலை 4 மணி முதல் - காலை 6 வரை 2 மணி நேரமும், காலை 8 மணிமுதல் - மதியம் 12 வரை 4 மணிநேரம், மாலை 4 மணி முதல் - இரவு 10 மணிவரை 6 மணி நேரம்.

GHIJKL வலயங்களில் காலை 6 - 8 மணிவரை 2 மணிநேரம்,மதியம் 12 மணிமுதல் - மாலை 4 மணிவரை 4 மணி நேரமும், மாலை 6 மணிமுதல் நள்ளிரவு 12 மணிவரை 6 மணிநேரம்.

PQRS வயலங்களில் அதிகாலை 4 மணிமுதல் காலை 6 மணிவரை 2 மணி நேரம், காலை 8 மணிமுதல் மதியம் 12 மணிவரை 4 மணி நேரமும், மாலை 4 மணிமுதல் இரவு 10 மணிவரை 6 மணி நேரம் மின்வெட்டு அமுலாக்கப்படவுள்ளது. (ம)

## யாழ். கோவிட்...

தமர் அறிவுறுத்தியுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் அமைக்கப்பட்ட மூன்று இடைத்தங்கல் முகாம்களில் காணப்பட்ட பல இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் மாயமாகியிருந்தமை கணக்காய்வு அறிக்கையில் அம்பலமாகியது.

வடமாகாண சுகாதார அமைச்சு மற்றும் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோரின் கண்காணிப்பில் இந்த கொரோனா இடைத்தங்கல் முகாம்கள் செயற்பட்டுவந்தன.

வடமாகாண சுகாதார சேவைகள் பணிமனையில் பல ஊழல் மோசடிகள் இடம்பெற்று வருகின்றமை குறித்து குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

## தலைவர்...

தான் வெளிப்படுத்துவேன் எனக் கூறி தென்னிலங்கையைச் சேர்ந்த ஒருவர் யாழில் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் சுப்பிரமணிய பூங்கா முன்றலில் நேற்று காலை இந்த கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

கவனயீர்ப்பில் ஈடுபட்டவர் கருத்துத் தெரிவிக்கையில்,

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஏன் பயங்கரவாதி ஆக்கப்பட்டார்? என்ன காரணத்திற்காக அவர் குற்றவாளி ஆக்கப்பட்டார்? அவர் ஒரு சாதாரண மனிதனாக இருந்திருப்பார். ஆனால் இலங்கையில் இருந்த அரசியல் பின்னணி மற்றும் ஏதோ ஒரு சூழ்ச்சியின் காரணமாகவே அவர் பயங்கரவாதி என பெயர் குறிப்பிடப்படும் அளவுக்கு மாற்றப்பட்டுள்ளார்.

அந்த நிலைமை மாற்றப்பட வேண்டும். இனியும் வடக்கிலிருந்து ஒரு பிரபாகரன் உருவாகும் நிலைமையினை நாங்கள் ஏற்படுத்தக்கூடாது. இனி பிறக்கும் குழந்தைக்கு நாங்கள் சயனைட் குப்பியை கொடுக்காது, வடக்கு-தெற்கு மக்கள் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம் எதிர்காலத்தில் மீண்டும் ஒரு பிரபாகரன் போன்றவர்களை நாங்கள் உருவாக்காது தடுக்க முடியும் என தெரிவித்துள்ளார். (ம-33,104)

## தமிழர்களின்...

பிரிட்டிஷ் தூதரகத்தின் அரசியல், 'சமாதானத்தை கட்டியெழுப்புதல் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான முதன்மைச் செயலாளர் ஹென்றி டொனாற்றியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கும் பிரிட்டிஷ் தூதரகத்தின் அரசியல், சமாதானத்தை கட்டியெழுப்புதல் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான முதன்மைச் செயலாளர் ஹென்றி டொனாற்றிக்கும் இடையிலான சந்திப்பு பாராளுமன்ற உறுப்பினரின் காரியாலயத்தில் நேற்று நடைபெற்றது. குறித்த சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் மற்றும் பிரித்தானியர் ஆகியோர் இலங்கைக்கு வருவதற்கு முன்பு தமிழர்கள் இந்த மண்ணிலே இறைமையோடுதான் வாழ்ந்தார்கள். பிரித்தானியாவினால்தான் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்பட்டது.

சுதந்திரம் வழங்கிய பின்னர்தான் இலங்கை அரசினால் எமக்கான இறைமை பறிக்கப்பட்டது.

ஆகவே பிரித்தானியாவிற்கும் பொறுப்பு இருக்கிறது. எம்மை நாமே ஆளுகின்ற இறைமையுடன் கூடிய சுயாட்சி முறையிலான தீர்வு கிடைக்க இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றார். (ம -100)

## தமிழ்...

போதே இதனை தெரிவித்தார்.

தமிழ் தேசியக் கூட்ட மைப்பிற்கும் ஜனாதிபதிக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின்போது கவனம் செலுத்தப்பட்ட அரசியல் கைதிகளின் விடுதலை, காணிப் பிரச்சினை, காணாமலாக்கப்பட்டவர்கள் விவகாரம் மற்றும் அபிவிருத்தி ஆகிய நான்கு விடயங்களும் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் நீண்டகால பிரச்சினைகள் என எஸ்.ஜெய்சங்கர் கூறினார்.

இந்த விடயங்கள் தொடர்பாக முன்னெடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள், நல்லிணக்கம் மற்றும் நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கு வழிவகுக்கும் என இந்திய வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டார்.

ஆனால், அது இந்த விடயங்கள் தொடர்பிலான கலந்துரையாடல்களின் முடிவாக அமையாது எனவும் அரசியல் தீர்வே முக்கியமானது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## ஜனாதிபதி...

மீரிஹானவில் உள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இல்லத்தின் நுழைவாயிலுக்கு அருகாமையில் நேற்று இரவு 7.30 மணியளவில் மக்கள் போராட்டம் ஆரம்பமானது.

மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு காணுமாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்தனர்.

தொடர்ந்து அங்கு ஏராளமானோர் திரண்டதால் பொலிஸார் உள்ளிட்ட பாதுகாப்புப் படையினர் தலையிட்டு நிலைமையைக் கட்டுப்படுத்த முயற்சித்த நிலையில் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரை தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

போராட்டம் காரணமாக மஹரகம - மீரிஹான வீதியில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டது.

இனவாதத்தை, மதவாதத்தை உருவாக்கிய குடும்பத்தை அழிக்கவேண்டும், ஜனாதிபதி பதவி விலகவேண்டும் என போராட்டக்காரர்கள் கோஷம் இட்டனர். மேலும் போராட்டக்காரர்களால் இராணுவத்தினரின் பேருந்து ஒன்றும் தீமூட்டி எரிக்கப்பட்டது.

தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான சூழ்நிலை, அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம், எரிபொருள் தட்டுப்பாடு குறிப்பாக 13 மணி நேர மின்வெட்டு காரணமாக மக்களுக்கு ஏற்பட்ட விரக்தியின் வெளிப்பாடாக சுயமாகத் திரண்டெழுந்தமக்களே அரச தலைவரின் மாளிகையின் முன் திரண்டு கோசங்களை எழுப்பி வருகின்றார்கள்

*(இச்செய்தி அச்சுக்கு போகும் வரை போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது)* (ம)

## ரெலோ...

ஊடக பேச்சாளருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் ஈ.பி.ஆர்.எல்.எப் கூட்டமைப்புக்குள் இருந்து கொண்டு தமிழரசுக்கட்சியை விமர்சித்து பின்னர் வெளியேறியது. அதே போன்றதான நிலையில் தற்போது ரெலோ காணப்படுகின்றது. எனவே ரெலோவும் வெளியேறிவிடும் என்ற அச்சம் உங்களுக்கு உள்ளதா என ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், [illegible] அவர்கள் வெளியேறி விடுவார்கள் என்று அச்சமாக இருக்க வேண்டும். அது சந்தோசமாகவும் இருக்கலாம்தானே. எமது கட்சியில் பலருக்கு நீண்ட காலமான எதிர்பார்ப்பு இவர்கள் எப்போது போவார்கள் என்பதே. எனினும் நாங்கள் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளில் பிளவு இருக்கக்கூடாது.எல்லோரும் சேர்ந்து இயங்குவது எமது மக்களுக்கு பலமான விடயம் என்பதனால் நாங்கள் எல்லோருடனும் சேர்ந்து பயணிக்கின்றோம்.

இன்று அரசாங்கத்துடன் தமிழ் தரப்பு பேச்சுவார்த்தை நடத்தும் சூழ்நிலையில் ரெலோ மட்டுமல்ல வெளியில் உள்ள ஈ.பி.ஆர்.எல்.எப், விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணியாகட்டும், தமிழ் தேசிய மக்கள் முன்னணியாகட்டும் எல்லோரும் இதற்கு இணங்கி ஒன்றாக சேர்ந்து நாங்கள் எங்களுடைய நிலைப்பாட்டை அரசாங்கத்துக்கு முன்வைக்க வேண்டும் என்பதே எனது தாழ்மையான கோரிக்கை என்றார். (ம-250)

## இலங்கைத்...

மு.க.ஸ்டாலின் ஆகியோருக்கிடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இதன்போதே தமிழக முதல்வர் இந்த கோரிக்கையை முன்வைத்ததாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ம)

### மெகா பவர்
திகதி 31/03/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1071
J 16 31 70 76 80

### மஹஜன சம்பத
திகதி 2022/03/31
சீட்டிழுப்பு இலக்கம் 4723
P 3 5 4 5 2 4

### தன நிதானய
திகதி -2022.03.31
சீட்டிழுப்பு இலக்கம் - 753
P 10 11 15 61

### அத கோடிபதி
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1526
வர்ணம்: கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2022.03.31
ரூ. 4,613,380/-
15 17 25 35 X

### சனிதா
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.03.31
சீட்டிழுப்பு இல: 3861
வர்ணம்: சிவப்பு
ரூ. 4,926,060/-
வெற்றி இலக்கங்கள் 40 47 54 70 W

### SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1700 நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2022/03/31 தினம் வியாழன்
V 09 25 53 54
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,651,232/-


### சம்வர்தன வாசனாவ
திகதி: 2022-03-31
வெற்றி வாரம் : 498 வர்ணம் : சிவப்பு
ரூ.10,261,144/-
K 31 23 09 5
ரூ.3,156,140/-
ரூ.10,396,636/-

### ராசி
திகதி 2022-03-31
சீட்டிழுப்பு வாரம் 3412
வர்ணம் கபிலம்
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,494,982/-
வெற்றி இலக்கங்கள் 08 35 40 56 மீனம்
2491 891
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 13,335,360/-

### ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
B 05 44 51 52 61
சீட்டிழுப்பு வாரம் 876
திகதி 2022.03.31 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 227,844,463

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



பிறப்பு
09.06.1948

இறப்பு
28.03.2022

## சண்முகநாதன் சிவராசா (சிவதாஸ்)

யாழ்., 50/19, செட்டித்தெரு, நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகநாதன் சிவராசா (சிவதாஸ், சிவானந்தா கபே உரிமையாளரின் மூத்த சகோதரர்) அவர்கள் கடந்த 28.03.2022 திங்கட்கிழமை அன்று இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகநாதன் - லீலாவதி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் சுதுமலை வடக்கு, மானிப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா மற்றும் பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் இராசமணியின் (குஞ்சு) பாசமிகு கணவரும் யோகராசா (ஆனந்தி), இந்திராணி, ரஞ்சினி, ஜெயதாஸ் (ஜெயா பார்மசி, நல்லூர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சர்மிலி (நோர்வே), சர்மிலா (கனடா), சஞ்சீர் (கனடா), சஞ்சித் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கோணேஸ்வரன், சசிதரன், மேகலா, சிவஜெனனி ஆகியோரின் அன்பு மாமனாரும் த்ரிஷா, மொனிஷா, யக்ஷியா, சதுர்ஷன், ஹர்ஷியா, சானுஜன், செந்துஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற வரதராஜா மற்றும் நாகேஸ்வரியின் அன்பு மருமகனும் சிவனேஸ்வரி, காலஞ்சென்ற மனோகரன் மற்றும் ஸ்ரீகாந்தன், கலைவாணி, சிவலிங்கம், காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் கமலாதேவி, கண்மணி, இந்திரா, சற்குணராணி, கருணை, இன்பம், குமாரராசா, பத்மஸ்ரீ ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் சுவேனிதா, கேமறனிற்றா, துஷாரா, நிலக்ஷன், தர்மினி ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் மயூரன், செந்தூரன், அர்ச்சனா, துஷாந், நிருஜலா, சஜிலா, மயூரி, சுதர்சன், நிருஷன் ஆகியோரின் பாசமிகு பெரிய மாமாவும் கஷானி, அனிஸ்மிகாவின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக் கிரியைகள் இன்று (01.04.2022) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 3 மணியளவில் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொ.பே: மனைவி - 077 260 3421,
சகோதரர்கள்: ஆனந்தி - 076 404 0326, ஜெயதாஸ் - 077 482 9729

தகவல்: மனைவி, மக்கள், சகோதரர்கள்

(10859)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.04.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.